விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 14 வியாழக்கிழமை (30.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 223




# முகாம்களிலுள்ள மக்களிடம் செல்ல எம்.பிக்களுக்கு உரிமை உண்டு

## உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் தமிழ் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று பார்வையிடுவதற்கு அவர்களுக்கு இருக்கும் உரிமையை ஏற்றுக் கொள்வதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இருப்பினும் தேசிய பாதுகாப்பு கருதி தனது நிலைப்பாட்டை அரசு தெளிவுபடுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணக் கிராமங்களிலுள்ள 310 பேர் முதற்கட்டமாக விடுவிக்கப்படவுள்ளனர்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டை சொந்த இடமாக கொண்ட நலன்புரி நிலையங்களிலுள்ள 74 குடும்பங்களைச் சேர்ந்த 310 பேர் விடுவிக்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களும் மிக விரைவாக கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவதுடன் தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்திலுள்ள இளைஞர் யுவதிகளுக்கும் தொழில்சார் பயிற்சி வழங்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கையாக விடுவிக்கப்படுவார்கள்.

நலன்புரி (14ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.வுடன் கூட்டுச் சேரும் நிலை புதுடில்லிக்கு ஏற்பட்டுள்ளது!

### இந்திய இராஜதந்திரி கருத்து

(புதுடில்லி)

சீனாவின் மூலோபாயத்தை முறியடிப்பதற்கான பொதுவான அக்கறையில் இந்தியா அமெரிக்காவுடன் இணைந்திருக்கின்றது.

ராஜபக்ஷவின் போருக்குஉறுதியான ஆதரவை வழங்கிய பின்னர் அரசியல் தீர்வை வலியுறுத்தும் பராக் ஒபாமா நிர்வாகத்துடன் நெருங்கிச் செயற்பட வேண்டியதாக உள்ளது என இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரியான எம்.பத்ரகுமார் தெரிவித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகளுக்கு பிற்பட்ட காலகட்டத்தில் இலங்கை (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிச் சந்தேக நபர்கள் நால்வர் கைது

(கொழும்பு)

கொழும்பில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் புலானாய்வுப் பிரிவின் முக்கியஸ்தர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் மேலும் நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் வெள்ளவத்தை மற்றும் கொட்டாஞ்சேனை பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரங்களில் மூக்கை நுழைக்க மாட்டோம்

### பாகிஸ்தான் திட்டவட்டம்

(இஸ்லாமாபாத்)

ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் மூக்கை நுழைக்க மாட்டோம் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று விரைவில் எட்டப்பட வேண்டும் என்று இந்தியாவுடன் சேர்ந்து பாகிஸ்தானும் அழுத்தம் கொடுக்குமா என்று ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோது பாகிஸ்தான் வெளிவிவகாரத்துறை மேலதிக செயலர் மசூத்காலித் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானத்தை அடைவதற்கும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும் இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையிலிருந்து சென்றிருந்த ஊடகவியலாளர்கள் முன்னிலையில் இஸ்லாமாபாத்தில் (14ஆம் பக்கம் பார்க்க)

## புதுமணத் தம்பதிகள் குத்திப் படுகொலை!

### கோண்டாவிலில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கில், திருமணமாகி 4 மாதங்களேயான புதுமணத் தம்பதியர் நேற்று முன்தினம் இரவு அவர்களது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் கூரிய ஆயுதங்கள் மூலம் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் கோண்டாவில் கிழக்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச் சம்பவத்தில் கோண்டாவில் கிழக்கு ஞானவைரவர் (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் உள்நாட்டு நிதி நிர்வாகம் நாணய நிதியத்திடம் செல்லும் அபாயம்

### ஜே.வி.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

கடன் தொகையினைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் நிபந்தனைகளுக்கு இணங்கி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இதனால்,உள்நாட்டில் நிதி நிர்வாகம் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லும் அபாய நிலை தோன்றியுள்ளது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித் தார்.

எந்தவொரு நிர்வாகத்திறனும் தற்போதைய அரசாங்கத்திடம் இல்லாமையால், பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது என்றும் (14ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே...

* 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை தரம்3 மாணவர்களுக்கான கணித செயற்பாடு அண்மையில் நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) பூ.குகதாசனும் சிறப்பு விருந்தினராக ஆசிரிய வள நிலைய முகாமைத்துவ உதவியாளர் இ. துஸ்யந்தனும் கலந்து கொண்டனர். அருகில் பாடசாலை அதிபர் திருமதி அ.த.துரைசிங்கமும் காணப்படுகின்றார்.

# இடம் பெயர்ந்துள்ள மக்கள் டிசம்பருக்குள் மீள் குடியமர்த்தப்படுவர்

## ஐ.ம.சு.கூ. வேட்பாளர் இரத்தினேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு யாழ்ப்பாண மாநகர சபை தேர்தலில் வெற்றியடைந்தால் இடம் பெயர்ந்த எமது மக்களை எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் மீள் குடியர்த்துவேன் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஆர். இரத்தினேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

நான் அரசியல் லாபத்திற்காகவோ, வர்த்தக வளர்ச்சிக்காகவோ இத் தேர்தலில் போட்டியிடவில்லை. அகதி முகாம்களுக்கு சென்று மக்களைப் பார்த்தவுடன் அவர்களை உடனடியாக மீட்க வேண்டும் என்ற நோக்கத்துடனே அரசியலில் இறங்கியுள்ளேன்.

இந் நடவடிக்கையை துரித கதியில் மேற்கொள்வதற்காக வடக்கின் வசந்தம் செயற்திட்டத் தலைவர் பசில் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி அனுமதியைப் பெற்றுள்ளேன்.

இதற்கமைய யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என். யோகராஜனின் ஆதரவுடனும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் பங்களிப்புடனும் அகதி முகாம்களில் உள்ள மக்களை மீட்பதற்காக விண்ணப்பப் படிவங்களை அவர்களது உறவினர்களிடம் வழங்கி வருகின்றோம்.

30 வருடங்களாக துன்பப்பட்டு அகதிகளாக வாழ்ந்து திரிந்த நிலையில் இனியும் இலங்கையில் அகதி என்ற சொல் இருப்பதற்கு இடமளிக்கமாட்டோம்.

அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு சுதந்திர வாழ்வும் தஞ்சமடைந்து புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களையும் தொழில் பயிற்சிகளையும் வழங்குவதுமே எனது கடமையாகும்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு மாநகரசபை அதிகர்ரத்தை கைப்பற்றி அவர்களின் ஆட்சியின் கீழ் இவ் செயற்பாடு திட்டங்களை நான் மேற் கொள்ளாவிடின் இவ் ஆட்சியில் இருந்து உடனடியாக பதவி விலகுவேன் என அவர் தெரிவித்துள்ளார். (ச-7)

# லொறிகளை பதிவு செய்ய வணிகர்கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இருந்து ஏ-9 பாதையூடாக பொருட்களை ஏற்றி வர உத்தேசித்து இருக்கும் சகல வர்த்தகர்களும் சகல லொறி உரிமையாளர்களும் யாழ்ப்பாணத்திலிருக்கும் தமது லொறிகளையும் வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் இருக்கும் தமது லொறிகளையும் யாழ். வணிகர் கழகத்தில் விநியோகிக்கும் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்த படிவங்களை நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன் இல. 165, மானிப்பாய் வீதியில் இருக்கும் யாழ் வணிகர் கழகத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ச)

# மீள் எழுச்சித்திட்ட அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலக மட்ட மீள் எழுச்சித்திட்ட அறிமுக நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (ச-14)

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விசேட விமான சேவை

(கொழும்பு)

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவை முன்னிட்டு நாட்டின் பிற பிரதேசங்களிலிருந்து ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் நலன் கருதி சலுகைக் கட்டணத்தில் விமான சேவையினை நடத்த அரசாங்கம் முன் வந்துள்ளது.

இதற்கமைய விமானப் படையினரின் அனுசரணையுடன் சுற்றுலாத் துறையினரும் இணைந்து இந்த விமான சேவையை இன்று முதல் நடத்தவுள்ளதாக சுற்றுலாத் துறை பிரதியமைச்சர் பைசல் முஸ்தப்பா நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (ச-14)

# பொதுத் தொலைபேசிக் கூண்டுகள் பாடசாலைகளில் அமைக்கப்படும்

## தேசிய தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளமையினால் சகல பாடசாலைகளிலும் பொதுத் தொலைபேசிக் கூண்டுகளை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய தொலைத் தொடர்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையொன்றில் மாணவியொருவரின் கையடக்கத் தொலைபேசியை சோதிப்பதற்கு முற்பட்டமையினால் அவர் தற்கொலை செய்து கொண்டார்.

இந்த அசம்பாவிதத்தையடுத்து நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தக் கூடாது என்ற சுற்று நிருபம் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதே வேளையில் பாடசாலையிலுள்ள மாணவ்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அவர்களுக்கு தொலைபேசி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாக தேசிய தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.இதனால் சகல பாடசாலைகளிலும் பொது தொலை பேசி கூண்டுகளை அமைப்பதற்கான நடவடிக்கைமுன்னெடுக்கப் பட்டு வருவதாகவும் அவ்ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 24 | 30 |
| 04 | 06 |
| 1941 | 2009 |



அமரர்

## நடராசா கனகரத்தினம்

(உரிமையாளர் கஜன் குறூப், திருநெல்வேலி)

கடந்த 30.06.2009 அன்று செவ்வாய்க்கிழமை மறைந்த எங்கள் குலவிளக்கு நடராசா கனகரத்தினம் அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று (30.07.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம்தாங்கள் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும்மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

என்றும் நினைவுடன்,
குடும்பத்தினர்.

அரசடி அம்மன் கோவில்
பின் வீதி,
ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.

(3033/இ-30)

# ஆங்கிலக்கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் சாந்தி!

## துணைவேந்தர் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

மூன்று தசாப்த காலமாக யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கில கல்வி வளர்ச்சிக்கு உழைத்த சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தி விக்னராஜா அவர்களின் பிரிவு எழுதும் கனம் பெரியது என யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ் .பல்கலைக்கழக ஆங்கில கல்வி வளர்ச்சியுடன் இரண்டறக் கலந்த விரிவுரையாளர் சாந்தியின் வாழ்க்கை Empathy என்ற பதத்துக்கான அர்த்தமாக மாணவர்களின் நிலையை உணர்ந்து அவர்களின் கல்வி மேம்பாட்டிக்கென அயராது உழைத்த அவர் அமைதியாக ஆற்றிய சமூகப்பணிகள் ஏராளம். அவரது பிரிவால் ஆழ்ந்த துயரிலுள்ள. குடும்பத்தினருடன் எமது பல்கலைக் கழகமும் இணைந்து கொள்கிறது என்றுள்ளது. (ச)

# தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆகஸ்ட் 5-ம் திகதி நள்ளிரவுடன் பூர்த்தி

யாழ். மாநகர சபை, வவுனியா நகர சபை மற்றும் ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும்ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளன.

இதன் பின்னர் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் அதற்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுமென தேர்தல்கள் செயலயம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஊவா மாகாண சபைக்காக 32 உறுப்பினர்களும் யாழ் மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபைக்காக 34 உறுப் பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இச் சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதிநடைபெறவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ச-14)

# முதியவரின் கழுத்தை நெரித்து தங்க மோதிரங்கள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

முதியவர் ஒருவரின் கழுத்தை நெரித்து அவர் அணிந்திருந்த தங்க மோதிரங்களை திருடர்கள் அபகரித்து சென்றுள்ளனர்.

இச் சம்பவம் கோண்டாவில் குமர கோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த க.வீரசிங்கம் (வயது 78) என்பவரது தங்க மோதிரங்கள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

பிரஸ்தாப முதியவரின் வீட்டிற்கு கடந்த 27 ஆம் திகதி திங்கட் கிழமை சென்ற இரு இளைஞர்கள் முதியவரிடம் தண்ணீர் பெற்று அருந்தி விட்டுச் சென்றுள்ளனர். செல்லும் போது அவர் அணிந்திருந்த மோதிரம் அழகாக இருப்பதாகவும் கூறி சென்றதாக முதியவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் மறு நாள் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அங்கு சென்ற நபர்கள் அவரின் கழுத்தை நெரித்து அவர் அணிந்திருந்த மோதிரங்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக அப் பகுதி கிராம சேவையாளர்கள் ஊடாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச-7,14)

# இன்று ஒரு தகவல்

## தொலைவு இருத்தல்

எனக்குத்தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் சொந்தமாக ஒரு கார் வைத்திருந்தார். அதில் ஏறி உட்கார்ந்து ஓட்ட ஆரம்பித்தார் என்றால் போதும். வழியில் வருபவர் போகிறவர்கலை திட்டிக் கொண்டே போவார்.

இவர் மட்டும் தான் வீதியில் ஒழுங்காக சொல்பவர் போலவும் மற்றவர்களெல்லாம் தாறுமாறாக போவது போலவும் அவருடைய நினைப்பு.

எதிரில் யாருமே வரவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதும் திட்டுவார்.

"என்ன றோட் இது... சுடுகாடு மாதிரி" என்பார் அப்படி ஒரு பழக்கம் அவருக்கு!

இப்படிப் பட்டவர்களுக்கெல்லாம் வசதியாக அமையக் கூடிய ஒரு தொழில்நுட்பம் தான் 'தொலைவு இருத்தல்' என்பது. அதாவது Telepresence இது ஒரு நவீன உத்திமுறை.

நம்மைத் தொலைவில் இருப்பதாக நினைக்கச் செய்யும் ஒரு தோற்ற அனுகூலம். இது எப்படியென்றால்...

காரோட்டுபவர் காரில் தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அவர் இன்னொரு ஊரில் கூட இருக்கலாம்.

அதாவது ஒரு மதுரையில் உட்கார்ந்து கொண்டு சென்னை அண்ணாசாலையில் காரோட்டலாம். வழியில் வருபவர் போகிறவர்கலை திட்டலாம். வம்பு வராது, ஏனெனில் அவர்களின் காதில் இது விழாது.

இது எப்படியென்றால்...

தொலைவு இருப்பு முகமூடி ஒன்றை தலையில் மாட்டிக் கொள்ள வேண்டும். அந்த முகமூடிக்குள் சின்னத் திரை இருக்கும். நீங்கள் இதை மாட்டிக் கொண்டு மதுரையில் ஒரு குளிர் சாதன அறைக்குள் கணிப்பொறிப் பெட்டிகளுக்கு மத்தியில் உட்காந்திருக்கிறீர்கள்.

அந்தச் சின்னத்திரையில் சென்னையிலுள்ள அண்ணா சிலை தெரிகிறது. எதிரில் வரும் கார்... குறுக்கே போகும் சைக்கிள் எல்லாம் தெரிகிறது. கார் டிரைவர் சீற்றில் நீங்கள் உட்காந்திருந்தால் என்னென்ன தெரியுமோ அவையெல்லாம் அந்த சின்னத்திரையில் தெரியும்.

நீங்கள் பாட்டுக்கு மதுரையில் ஓர் அறைக்குள் உட்கார்ந்து கொண்டே சென்னையில் காரை செலுத்திக் கொண்டு போகலாம். சைக்கிள் குறுக்கே வருகிறதா... சடாரென வண்டியை நிறுத்தலாம். இடதுபக்கம் முந்தி ஒரு ஸ்கூட்டர் வேகமாக போகிறதா... அதை விரட்டிப் பிடிக்கலாம்.

சென்னை அண்ணாசாலையில் நீங்கள் வண்டி ஓட்டுவது நிஜம் ஆனால் மதுரையில் உங்கள் முகமூடிக்குள் தெரிவது மாயத்தோற்றம்... அதை மாய நிஜம் அல்லது மாய யதார்த்தம் என்று சொல்கிறார்கள். Virtual Reality

விண்வெளி ஆராய்ச்சிக்கெல்லாம் இந்தத் தொழில்நுட்பம் மிகவும் உபயோகம். இயந்திர மனிதர்களை செவ்வாய்க்கிரகத்தில் இறக்கி விட்டுவிட வேண்டியது. இங்கே முகமூடியை மாட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டே அவர்களை வேலை செய்ய வைக்கலாம். எந்தப்பக்கம் போக வேண்டுமோ – போக வைக்கலாம். மண்ணைத் தோண்டி எடுக்க வேண்டுமா – எடுக்க வைக்கலாம். அங்கு போய் நாம் என்ன செய்ய நினைக்கிறோமோ அவற்றையெல்லாம் இங்கிருந்தே செய்யலாம்.

பூமியில் இருக்கும் கட்டுப்பாட்டு அறைக்குள் இருந்து கொண்டு முகமூடியை மாட்டிக் கொண்டு கைகால்களில் மின்னணு உணர் கருவிகளை பதித்துக் கொண்டு செவ்வாய்க் கிரகத்திலுள்ள மின்னணு கருவிகளை இயக்கலாம்.

செவ்வாய் கிரகத்தில் சேகரிக்கப்படும் தகவல்கள் மின்காந்த அலைத் தொடர்பு வழியாக பூமிக்கு வந்து சேர குறைந்தது 20 நிமிடமாவது எடுக்கும். ஆனால் இந்த முகமூடியைப் போட்டிருப்பவர் உடனுக்குடன் அங்கே பார்ப்பதை நேரடி வர்ணனை செய்யலாம்.

இந்த மாயத்தோற்ற அறிவியல் எதிர்காலத்தில் பெரிய பெரிய வேலைகளையெல்லாம் செய்யப்போகிறது.

ஒரு பேருந்து ஓட்டுனர் திடீரென்று சிரிக்கத் தொடங்கினாராம்.

"ஏன் சிரிக்கிறீங்க?" என்று கேட்டிருக்கிறார் பக்கத்திலிருந்தவர்.

"துன்பம் வரும்போது சிரிக்கச் சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள். அதனால் சிரிக்கிறேன்" என்றார்.

"இப்பொழுது யாருக்குத் துன்பம்?" என்றார் இவர்

"நம் எல்லோருக்கும் தான்" என்றார் அவர்.


"எப்படிச் சொல்றீங்க?" என்றார்.

"எதிரில் பாருங்க ஒரு சக்கரம் உருண்டு ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

"அந்தச் சக்கரத்துக்கும் நம் துன்பத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"அது நம்முடைய பஸ்ஸிலிருந்து தான் கழன்று ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*





அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நிறுவுனர் தினமும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நிக்கொட் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர். சிவரூபன் உரையாற்றுவதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. கைலாசநாதன், பாடசாலை அதிபர் கு. ஜெகநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரையாளர் திருமதி. அபிராமி சிவரூபன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தடகளப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

ஆண்களுக்கான 20 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட முடிவுகள் வருமாறு,

**100 மீற்றர்**

எ. அமல்ராஜ் (கரவெட்டி), எஸ். சிவசொரூபன் (கோப்பாய்), எஸ். காந்தராஜா (யாழ்ப்பாணம்).

**200 மீற்றர்**

ஏ. அமல்ராஜ் (கரவெட்டி), எஸ். சிவசொரூபன் (கோப்பாய்), கே. சிவகுமார் (தெல்லிப்பளை).

**400 மீற்றர்**

எஸ். ஐங்கரன் (கோப்பாய்), எஸ். அனுராகன் (தெல்லிப்பளை), எ. மரியதாஸ் (யாழ்ப்பாணம்).

**800 மீற்றர்**

ஆர் நிசாந் (உடுவில்), எஸ். அனுராகன் (தெல்லிப்பளை).

**1,500 மீற்றர்**

ஏ. நித்தியானந்தன் (சாவகச்சேரி), ஆர். நிசாந் (உடுவில்), கே. பவிலரசு (தெல்லிப்பளை).

**10,000 மீற்றர்**

ஏ. நித்தியானந்தன் (சாவகச்சேரி), கே. பவிலரசு (தெல்லிப்பளை), எம். யதிம்சன் (கோப்பாய்).

**வேக நடை**

ஆர். நிசாந் , ஆர் தமிழ் வாணன் (உடுவில்), எம். யகிம்சன் (கோப்பாய்).

**உயரம் பாய்தல்**

கே. ஜெயந்தன், கே. நித்தியானந்தன் (கோப்பாய்).

**நீளம் பாய்தல்**

எ. அமல்ராஜ், ந. சுபேந்திரன், (கரவெட்டி), கே. சுகந்தன் (உடுவில்).

**தட்டெறிதல்**

ஆர். ரதீஸ்வரன் (தெல்லிப்பளை), ரி. கஜன் (கோப்பாய்).

**குண்டெறிதல்**

ஆர். ரதீஸ்வரன் (தெல்லிப்பளை), கே. ஜெயந்தன் (கோப்பாய்).

**ஈட்டி எறிதல்**

பி. சந்தோஷ் (தெல்லிப்பளை), ரி. குகன் (கோப்பாய்), கே. சுகந்தன் (உடுவில்).

**4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

கரவெட்டி பிரதேச செயலகம், கோப்பாய் பிரதேச செயலகம், தெல்லிப்பளை பிரதேச செயலகம்.

**4×400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

உடுவில் பிரதேச செயலகம், தெல்லிப்பளை பிரதேச செயலகம் (ஓ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ள யா/ சன்மார்க்க மகா வித்தியாலய தரம் IC அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் யாழ். வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் சேவை வகுப்பு I, வகுப்பு 2 I தரத்தினை சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

உரிய விண்ணப்ப படிவங்களை தாமே தயாரித்து எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் லயன்ஸ் கழக அனுசரணையுடன் நடைபெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் இறுதிப் பயிற்சிப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகள் வினாத்தாள்களை அவ்வவ் கோட்டங்களில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (ஓ)

## இராசி பலன்

*30.07.2009*

*(ஆடி 14, வியாழக்கிழமை)*

*நவமி முன்னிரவு 09.13 மணிவரை*

*விசாகம் பின்னிரவு 1.04 மணிவரை*

*இராகுகாலம் 1.33-3.03 மணிவரை*

*சுபநேரம் 7.33-9.03 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | அபூர்வ சந்திப்பு, கௌரவமான நிலை, திடீர் பயணம், முயற்சி கைகூடும். |
| இடபம் | சுகவாழ்வு, செய்தொழில் விருத்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய். |
| மிதுனம் | நண்பர்கள் சந்திப்பு, வேலைச் சுமை, முயற்சி தாமதம், ரோக நிலை. |
| கடகம் | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், சுபசெலவு. |
| சிங்கம் | இனிய சம்பவம், கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, பண வருவாய். |
| கன்னி | பெரியோர் உதவி, வீண் வார்த்தை, காரிய தாமதம், தனவிரயம். |
| துலாம் | ஆழ்ந்த சிந்தை, போசன சுகம், பொருள் சேர்க்கை, அதிகாரம். |
| விருச்சிகம் | பிதா சிந்தை, மனச்சஞ்சலம், எடுத்த காரியம் தாமதமாகும், சயனசுகக்குறைவு. |
| தனுசு | தெய்வ சிந்தை, பாராட்டு, முயற்சி கைகூடும், மனமகிழ்ச்சி. |
| மகரம் | சுபநிகழ்வு, உற்சாகம், பிறர் உதவி, காரிய அனுகூலம். |
| கும்பம் | உடல் உழைப்பு, ஆன்றோரால் மதிக்கப்படுதல், கட்டுப்பாடு, ஆரோக்கியக் குறைவு. |
| மீனம் | மனக்கவலை, வாகன பயம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 70 | 80 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 |
| தக்காளி | 150 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | -- | 140 | -- |
| கரட் | 100 | 120 | 80 |
| பூசணி | 50 | 60 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 45 | 55 | 30-50 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 60 | 80 | 50 |
| வெண்டிக்காய் | 25 | 30 | 20 |
| கரணைக் கிழங்கு | 60 | 80 | -- |
| பயிற்றங்காய் | 40 | 50 | 30 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 240 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 25-30 | 25 |

# குடாநாட்டு கடற்தொழில் துறை அபிவிருத்தி துரித கதியில் நடைபெற்று வருகிறது

## கடற்தொழில் திணைக்கள யாழ். உதவிப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டு கடற்றொழில் துறைக்கு "கமநெகும" திட்டத்தில் 234 மில்லியன் ரூபாய் நிதியும் " வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தில் 78.8 மில்லியன் ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**இந்நிதியின் மூலம் யாழ்.குடாநாட்டு கடற்றொழில் துறை அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். மீன்பிடி நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம் தெரிவித்தார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது,

மஹிந்த சிந்தனையில் உள்ளடக்கப்பட்ட கமநெகும திட்டத்தில் யாழ்.குடாநாட்டு கடற் தொழில் துறை அபிவிருத்திக்கு 234 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதியின் மூலம் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்கள் திருத்தம் செய்து கொடுத்தல், மீன்பிடி வலைகள் வழங்கல் போன்ற ஆரம்ப கட்ட வேலைத் திட்டங்கள் யாழ்.அரச அதிபர், சகல பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் யாழ். மீன்பிடி நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக நடைபெற்று வருகிறது.

அத்துடன் "வடக்கின் வசந்தம் "180 நாட்கள் வேலைத் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சினால் கடற்தொழிலாளர்களுக்கு உள்ளீடுகள் வழங்குவதற்காக 78.8 மில்லியன் ரூபா நிதி முன்மொழியப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் குடாநாட்டு கடற்றொழிலாளர்களுக்கு வள்ளங்கள் மற்றும் கட்டு மரங்கள் போன்ற மீன்பிடி உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகிறது.

**இரண்டு கொள்கலன் ஐஸ் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிப்பு**

"வடக்கின் வந்தம்" வேலைத் திட்டத்தில் இரண்டு கொள்கலன் ஐஸ் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத் துள்ளது. இதில் யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க ச்மாசங்களின் சம்மே ளனத்தின் பொறுப்பில் யாழ்ப்பாணத்தில் ஒன்றும் வடமராட்சி கடற் தொழிலாளர் சங்க சமாசத்தின் பொறுப்பில் பருத்தித்துறையில் ஒன்றும் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கை யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக் களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவற்றை நிர்மாணிப்பதற்கான 'இடங்கள் இனங்காணப்பட்டு கட்டட நிர்மாண வேலைக்கான மதிப்பீடுகள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு கடற்றொழில் அமைச்சின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

தற்போது யாழ்.அரச அதிபர் ஊடாக கேள்வி அறிவித்தல் விடப்பட்டு யாழ்.மத்திய கட்டடத் திணைக்களத்திடம் கட்டட நிர்மாண வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டவுள்ள கொள்கலன் ஐஸ் உற்பத்தி நிலை



யத்துக்கு 5.099 மில்லியன் ரூபாயும் பருத்தித்துறையில் அமைக்கப்படவுள்ள ஐஸ் உற்பத்தி நிலையத்திற்கு 4.905 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இரு கட்டடங்களின் அடித்தள வேலைகள் முடிவுற்ற இரண்டு நிலையங்களுக்குரிய ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டு நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளது என்றார். (5)

# கடலுணவுகளை தென்னிலங்கைக்கு அனுப்ப 11 கூலர் வாகனங்கள் இனங்காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கடலுணவு உற்பத்திகளை தென்னிலங்கைக்கு அனுப்பிவைப்பதற்காக 11 கூலர் வாகனங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். மீன்பிடி நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் உதவிப் பணிப்பாளர் மேலும் கூறுகையில்,

யாழ்.குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கடலுணவுகளை தென்னிலங்கைக்கு அனுப்பி சந்தைப்படுத்துவதற்காக 11 கூலர் வாகனங்கள் யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

இதில் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் 6 கூலர் வாகனங்களும் தனியாரின் 5 கூலர் வாகனங்களும் இனங்காணப்பட்டுள்ளது.

இவ் வாகனங்கள் மூலம் யாழ். குடாநாட்டுக் கடலில் பிடிக்கப்படும் மீன்களை ஏ-9 வீதியூடாக தென்னிலங்கைக்கு அனுப்புவதற்கான பாதுகாப்பு அனுமதியைப் பெற யாழ்.அரச அதிபர் ஊடாக விண்ணப்பித்துள்ளோம்.

அனுமதி கிடைத்ததும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு 11 கூலர் வாகனங்களில் மீன்கள் அனுப்பப்படும்.

அத்துடன் கொழும்பிலிருந்து திரும்பி வரும் போது 11 கூலர் வாகனங்களிலும் ஐஸ் கட்டிகள் எடுத்து வரப்படும் என்றார். (5)

## துங்காலை துறையில் நங்கூரமிடும் வசதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு துங்காலை துறையில் நங்கூரமிடும் வசதிகள் ஏற்படுத்துவதற்கான முன்மொழிவை நெக்கோட் ஏற்றுக்கொண்டுள்ளதாக யாழ.நீரியல் வளத் திணைக்கள மீன்பிடி உதவிப் பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்காக நெக்கோட் 1.669 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது இத்திட்டத்திற்கமைய ஆரம்பக் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் யாழ். மீன்பிடி நீரியல் வள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (5)

## குடாநாட்டு கடலில் உயிரின வளர்ப்புக்கள்

### நாரா நிறுவனம் ஆய்வை மேற்கொண்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீன் , கடல்பாசி, இறால் மற்றும் நண்டு வளர்ப்புகள் போன்ற திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏதுவான இடங்கள் ஆய்வுகள் மூலம் இனங்காணப்பட்டுள்ளதாகவும்,மீன்பிடி, நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் மீ... ...டல்பாசி, இறால் மற்றும் நண்டு வளர்ப்புகள் போன்ற திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏதுவான இடங்களை ஆய்வு செய்து வளங்கள் பற்றி தீர்மானிப்பதற்காக நாரா நிறுவன ஆய்வுக் குழுவினர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இக்குழுவினர் தமது ஆய்வுப் பணிகள்ள நிறைவு செய்து அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.இதன்மூலம் இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றார்.(5)

## கடற்தொழில் கூட்டுத்தாபனத்தின் அலுவலகம் யாழில் ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத்தில் மீன்சந்தைப்படுத்தலை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ். மீன்பிடி நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். தர்மலிங்கம் தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,


யாழ்.மாவட்டத்தில் மீன்சந்தைப்படுத்தலில் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனம் தமது உத்தியோகஸ்தர் ஒருவரை ஆரம்ப கட்டமாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

மேலும் கொள்வனவு உத்தியோகத்தர்களை நியமித்து இலங்கைக் கடற்தொழில் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணத்தில் தனது அலுவலகத்தை ஆரம்பிக்கும் என்றார். (5)









கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் நடைபெற்ற உலக, இலங்கை பாடசாலை வரைபட திரைச்சீலை நீக்கல் விழாவில் ஆனந்தி பழமலர்ச்சோலை உரிமையாளர் ரி.டயஸ் டிலாசல் இலங்கை வரைபடத்தை திறந்து வைப்பதையும், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர் பா.மதனரூபன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி திருமதி ஜே.தியாகலிங்கம் நினைவுப் பரிசில் வழங்குவதையும், பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் வரைபடம் வரைந்தமைக்கான நினைவுப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# 'வணங்கா மண்' நிவாரணப் பொருட்கள்

## ஏலத்தில் விடப்படும் அபாயம்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவென ஐரோப்பிய வாழ் தமிழர்களால் அனுப்பப்பட்ட பொருட்களை பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட தாமதத்தையடுத்து இந்தியாவின் கொலராடோ கப்பல் சுமந்து வந்தது. தற்போது அப் பொருட்களை மீட்டு உரிய மக்களைச் சென்றடையச் செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதத்தையடுத்து அவை கொழும்பு துறைமுக விதிமுறைகளின்படி ஏலத்தில் விடப்படும் அபாயம் எற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய தமிழர்கள் இலங்கை மக்களுக்காக உணவு, உடை, மருந்து என 884 தொன் நிவாரணப் பொருட்களை வணங்கா மண் கப்பலில் அனுப்பிவைத்தனர். அதை இலங்கை அரசு திருப்பி அனுப்பியது. இதையடுத்து சென்னை துறைமுகத்துக்கு வெளியில் பல நாட்கள் வணங்காமண் கப்பல் தத்தளித்தது.

முதல்வர் கருணாநிதியின் நடவடிக்கையை அடுத்து, அக் கப்பலில் கொண்டு வரப்பட்ட பொருட்களை இன்னுமோர் 27 கொள்கலன்களிற்கு மாற்றப்பட்டு அவை சென்னை துறைமுகத்தில் உள்ள சி.சி.டி.எல். நிறுவனத்தின்மூலம் கொலராடோ என்ற சரக்குக் கப்பலிற்கு மாற்றப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தக் கப்பல் கடந்த 9 ஆம் திகதி கொழும்புத் துறைமுகம் சென்ற பின்னரும், நிவாரணப் பொருட்களை இதுவரை செஞ்சிலுவைச் சங்கத்தினர் பொறுப்பேற்கவில்லை.

இதனால் இந் நிவாரணப் பொருட்கள் கொழும்புத் துறைமுகத்தில் கடந்த 19 நாட்களாக கேட்பாரற்று உள்ளன.

இதுகுறித்து தமிழகத்தில் உள்ள மனிதம் மனித உரிமை அமைப்பின் செயல் இயக்குநர் மற்றும் லண்டன் மெர்ஸி மிஷனின் இந்தியத் தொடர்பு அலுவலர் அக்னி சுப்பிரமணியன் கூறுகையில்,

நிவாரணப் பொருட்களை எடுத்து விநியோகிக்க இலங்கைப் பணத்தில் ரூ 76 இலட்சம் செலவாகும் என்று தமிழகத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து இலண்டனில் உள்ள மெர்ஸி மிஷன் (கருணை தூதுவன்) அமைப்பிடம் கூறினோம்.

எனினும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நிவாரணப் பொருட்கள் ஐரோப்பாவில் இருந்து புறப்பட்டு 70 நாட்களுக்கு மேல் ஆகின்றது. நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு கிடைக்க இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ஓ-6)

# கல்வித்துறையில் அரசியல் நியமனங்களை நிறுத்தாவிடின் கல்வியின் எதிர்காலம் பாதிக்கப்படும்

## ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கல்வித் துறையில் பிரதான நிர்வாகப் பணிகளில் 3 ஆயிரத்திற்கும் அதிகமான அரசியல் நியமனங்கள் காணப்படுவதால் உள்நாட்டில் கல்வியின் தரமும் 35 இலட்சம் மாணவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டாண்டு காலம் தொடக்கம் கல்வித் துறையிலும் மாணவர்களுக்கான வினாத்தாள்களிலும் ஏற்றுக்கொள்ள முடியாதளவிற்கு பிழைகளும் சீரழிவுகளும் காணப்பட்டன. அரசாங்கமும் கல்வியமைச்சும் இலங்கையில் கல்வித் துறையினைப் பாதுகாக்க தவறியமையே பிழைகளும் சீரழிவுகளும் பாரியளவில் தலைதூக்க காரணமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கான தவணைப் பரீட்சை வினாத்தாள்களில் ஏற்பட்டு வரும் பிழைகள் தொடர்பாக நேற்று முன்தினம் தெளிவுபடுத்துகையிலேயே ஜோசப் ஸ்டாலின் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தெரிவித்ததாவது,

இன்று இலங்கையில் கல்வித் துறை பாரியளவில் பின்னடைவுகளை சந்தித்து வருகின்றது. அண்மைக்காலமாக மணவர்களுக்கான வினாத்தாள்களில் பாரியளவிலான பிழைகள் ஏற்படுவதால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் அறிவியல் ரீதியிலான பிரச்சினைகளையும் சந்திக்கின்றனர்.

காலாகாலமாக கல்வியமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழே பாடசாலைகளில் நடைபெறும் பொதுத் தவணைப் பரீட்சைகள் நடைபெறுவதுடன் வினாத்தாள்களும் தயாரிக்கப்பட்டு வந்தன. ஆனால் தற்போது கல்வியமைச்சும், பரீட்சைதிணைக்களமும் பாடசாலை தவணைப் பரீட்சைகளில் நேரடியாக தொடர்பையோ கண்காணிப்பையோ செய்யாமல் மாகாணக் கல்வி திணைக்களங்களுக்கு பொறுப்புக்களை வழங்கியமையாலேயே இன்று வினாத்தாள்களின் தரத்தில் சந்தேகங்கள் தோன்றின.

பெரும்பாலான மாகாணங்களில் காணப்படும் பாடசாலைகளில் தவணைப் பரீட்சை கட்டணமாக 60ரூபா தொடக்கம் 90 ரூபா வரையில் மாணவரிடமிருந்து பெற்றுக் கொண்டு பாரியளவிலான பிழைகளை உடைய வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்கி மாணவர்களை பாதாளத்தில் தள்ளியுள்ளனர்.

கல்வியமைச்சர் மேற்படி தவறுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தமது பொறுப்பிலிருந்து நழுவியுள்ளார். அரசியல் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து இன்று இலங்கையின் கல்வித்துறையில் தகுதிகளேயற்ற 3 ஆயிரத்திற்கு அதிகமானோர் நிர்வாகப் பணிகளில் நியமனங்கள் பெற்றுள்ளனர்.

புனிதமான கல்வித்துறையை தகுதியற்றோர் கைகளில் வழங்கி உள்நாட்டு கல்வியை சீரழித்ததுடன் 35 இலட்சம் மாணவர்களின் எதிர்காலத்தையும் சீரழிக்கும் வகையில் இன்று தேசிய கல்வி நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எனவே உடனடியாக கல்வித் துறைகளில் காணப்படும் அரசியல் நியமனங்களை இடைநிறுத்தா விடின் இலங்கையில் கல்வியின் எதிர்காலம் பாதிக்கப்படுவதுடன் வளமான மாணவ சமூகமும் எதிர் காலத் திற்கு கிடைக்காமல் போய் விடும். (ஓ-6)

# மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் தாதியர் குழு போராட்டம்

### இராணுவத்தினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

மகரகம புற்றுநோய் வைத்தியசாலையின் தாதியர்கள் குழுவொன்று ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக வைத்தியசாலையின் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

குறித்த தாதியர்களின் பல கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளதுடன் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இவ்வேளையில் வழங்க முடியாது என சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஒரு சிலர் மாத்திரமே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தாதியர்களின் இடமாற்றத்தை செல்லுபடியற்றதாக்குமாறு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அரசாங்கத் தாதியர்களின் சங்கம் தெரிவித்தது. (ஓ-3)

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன் குறித்து பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை


(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்றுக்கொள்ளப்படும் கடனுதவி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணா திலக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். இந்த நடவடிக் கைகள் குறித்து மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசிய மானது எனவும் அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் அவர்களது தவறுகளை மறைத்துக்கொள்ள பல மாறுபட்ட தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். அத்துடன் தேர்தலை இலக்கு வைத்தும் இவ்வாறான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-14)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 4 ஆம் திருவிழா



## உனக்குக் கிடைத்திடும் வீடு

நல்லைப்பதி நாயகனை நாடு – உன்
தொல்லைகள் தொலைந்துவிடும் – அவன்
புகழ்பாடு. உனக்குள்ளே அவனை
என்றும் தேடு அவன் அடியாருடன்
என்றும் நீ கூடு அதனால் உனக்குக்
கிடைத்திடும் இறுதியில் வீடு.


எஸ்.கே.மனோகரன், சுன்னாகம்

## அருளினை தருவாயப்பனே !

அழகுமயில் வாகனனே
அலங்கார ரூபனே
அந்தமில் அழகனே
ஆறுபடை கொண்டவனே
ஆறுமுகங்களை உடையவனே
ஆதிசிவனின் பாலகனே
அன்பருக்கு வரமீபவனே
அருளினைத் தருவாயப்பனே !

திருமதி பா.செல்வராணி, வட்டுக்கோட்டை

## நாளுமே காப்பாயப்பா



சூரனை வதைத்தவா
துயரினைத் துடைத்தவா
சுந்தரம் ஆனவா
பாலனாய் தவழ்ந்தவா
பண்டாரம் ஆனவா
பரமனின் மகனானவா
ஞானப் பழமானவா
ஞாலம் வலம்வந்தவா
ஞானமே வேலானவா
நல்லையில் உறைபவா
நலன்களைத் தருபவா
நாளுமே காப்பாயப்பா

சிவபுரக்கவிராயர்

## கோனாகி அரசாளும் நல்லைக் கந்தன்

நல்லை வந்துறை நற்றமிழ்க் கந்த
நாடியுன்னைச் சரண்புகுந்தோம்
நல்வாழ்வை நமக்கீவாய் !
மயில் மீது திருவீதி உலா வந்து
மருளும் பிணி யாவும் போக்கி
மனத்தெழுந்தருள் புரிவாய்!
சொல்லா மறையின் பொருள்
சொல்லிய இறைவா !
தொண்டர்கள் உள்ளம் நெகிழ
சோதியாய் அருட்காட்சி தந்திடுவாய்
கல்லாய் நீயிருந்தால் போதுமா?
கஷ்டங்கள் தீர்த்து வைக்க
கதியெனவே உன்னை அழைக்கின்றோம்
கோனாக நல்லை அரசாளும் கோமகனே
குறத்தி மனையாள் துணையோடு
குருவாய் எமக்கருள் புரிவாய் குமரா!

குப்பிளான், செ.ரவிசாந்

## சங்கத் தமிழ் காப்பாய்



கானமுடன் தவில் நாதம் முழங்கும்
ஞானம் தவழ் நல்லையம் பதி உறை
ஆறுபடை வீடுடையாய்
ஆனைமுகன் தம்பியே
ஆண்ட இனம் இன்று
அவதியுறு (ம்) நிலை நீக்க
சூரனை வதம் செய்த
சுந்தரனே அருள்புரிவாய்
பூத நாயகனே
புவிக்கும் நாயகன் நீ
இடர் தீர தொழுகின்றோம்
சங்கத் தமிழ் காப்பாய்

இணுவை, சுகந்தி




சற்று நீ இரங்கிடாயோ
சண்முகா எம்மைக் காக்க!

லாவண்யா பல்முக்குக் கண்ணாடி அகம்



552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை
முன்பாக)


கிளை பருத்தித்துறை
வீதி, நெல்லியடி.
(பொலிஸ் நிலையம்
முன்பாக)

# நைஜீரியாவில் இடம்பெற்ற வன்முறைகளில் 150 க்கும் அதிகமானோர் பலி

வட நைஜீரியாவில் கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற வன்முறைகளில் பலியானவர்களின் தொகை 150 பேருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அப்பகுதியில் அமைதியை நிலை நாட்டும் முயற்சியில் பாதுகாப்பு படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

யோபே, கனோ, பொர்னோ மற்றும் பிளேரியு ஆகிய பாதிக்கப்பட்ட மாநிலங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.



பொலிஸ் நிலையங்கள் மீதும் அரசாங்க அலுவலகங்கள் மீதும் ஆயுதம் ஏந்திய போராளிகள் தாக்குதலை நடத்தியதையுடுத்தே வன்முறைகள் உச்சக்கட்டம் அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது பொதுமக்கள் கார்களிலிருந்து பலவந்தமாக வெளியே இழுத்து எடுக்கப்பட்டு கட்டுக்கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.




மத போதனையாளர்களில் ஒருவரான மொஹமட் யூஸுப்பின் ஆதரவாளர்களான மேற்படி போராளிகள், மேற்குலக கல்வி முறையானது இஸ்லாமிய போதனைகளுக்கு எதிரானது என எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## தோல் கலங்களிலிருந்து எலிக்குஞ்சு உருவாக்கம்

எலியொன்றின் தோலிலிருந்து இன விருத்தியாகும் ஆற்றல் மிக்க மூலவுயிர்க் கலங்களை சீன ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.



இந்த மூலவுயிர்கலத்தை பெண் எலியின் கருப்பையில் பதித்து உயிருள்ள எலிக் குஞ்சுகளை உருவாக்கும் அடுத்த கட்ட நடவடிக்கையில் சாங்காய் -ஜியோலோ தோங் பல்கலைக்கழகத்தின் பரம்பரையலகு மருத்துவ நிறுவகத்தைச் சேர்ந்த மேற்படி ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஓ-6)

# ஆங்சான் சூகிக்கு சர்வதேச மன்னிப்பு சபையின் உயர் விருது



மியன்மாரில்நெடுங் காலமாக தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ள ஜனநாயக ஆதரவுத் தலைவர் ஆங்சான் சூகிக்கு சர்வதேச மன்னிப்பு சபையின் உயர் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த கௌரவமானது ஆங்சான் சூகி எதிர்கொண்டுள்ள முக்கிய சிறைத் தண்டனையொன்றிலிருந்து அவருக்கு பாதுகாப்பளிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

1989 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி ஆங்சான் சூகி மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டபோது, முதன் முதலாக கைது செய்யப்பட்டார்.

அதன் 20 ஆண்டுஞாப கார்த்த தினத்தையொட்டி அவருக்கு இவ் விருது வழங்கப் பட்டுள்ளது. (ஓ-6)

# மைக்கேல் ஜக்ஸன் அவரது பிரத்தியேக மருத்துவரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்

## அதிகாரிகள் தெரிவிப்பு

பொப் இசைப் பாடகர்மைக் கேல் ஜக்ஸனுக்கு அதிசக்தி வாய்ந்த மருந்தொன்றை வழங்கி அவரது பிரத்தியேக மருத்துவர் கொர்னாட் முர்ரேயே கொன்றுள்ளதாக பொலிஸார் நம்புவதாகப் பெயரை வெளியிட விரும்பாத சட்ட அமுலாக்க அதிகாரி ஏ.பி. செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஜக்ஸனுக்கு டிப்றிவன் என்று அறி யப்



படும் புரொப்போ போல் மயக்க மருந்தை மருந்து வர் வழங்கியமை காரணமாக அவர் மாரடைப்புக்கு உள்ளாகி மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனையில் பெரிய அறுவைச் சிகிச்சைகளின் போது நோயாளிகளை மயக்கமடையச் செய்வதற்குப் பயன்படுத்தப் படும் டிப்றிவின மருந்து ஜக்ஸனின் வீட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதில் பிரதான சந்தேக நபராக மருந்துவர் முர்ரே (51 வயது) விளங்குவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

கடந்த 3 வருட காலமாக ஜக்ஸனின் பிரத்தியேக மருத்துவராக செயற்பட்டு வந்த முர்ரே ஜக்ஸனின் லண்டன் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்குப் புறப்படும் நோக்கில் அண்மையில் பாடகரின் வீட்டுக்கு குடி



மருத்துவர் முர்ரே

வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பொலிஸாரும் மருந்துகள் தொடர்பான நிபுணர்களும் மருத்துவர் முர்ரேயின் அலுவலகத்தில் தேடுதல் மேற் கொண்டனர்.

இந்நிலையில் லொஸ் எஞ்சல்ஸ் மரண விசாரணை அதிகாரிகளின் ஜக்ஸனின் பிரேத பரிசோதனை தொடர்பான உத்தியோக பூர்வ அறிக்கை இவ்வார இறுதியில் வெளி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பவ தினம் நள்ளிரவு மருத்துவரின் மேற் பார்வையில் சொட்டு மருந்தாக டிப்றிவன் ஜக்ஸனுக்கு ஏற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அம் மருந்தை பாவிப்பவர் உறங்கியதும் அம் மருந்து வழங்கப்படுவது நிறுத்தப் படுவது அவசியமாக உள்ள நிலையில் முர்ரே உறங்கியதால் அளவுக்கு அதிகமாக அம் மருந்து ஜக்ஸனின் உடலில் சேர்ந்து அவர் மரணத்தைத் தழுவியதாக குற்றஞ்சாட்டப் படுகிறது.

மிகவும் திட்டமிட்ட முறையில் மருத்துவர் முர்ரேயின் கண்காணிப்பில் ஜக்ஸனுக்கு டிப்றிவன் மருந்து வழங்கப்பட்டமை நிரூபண மாகியுள்ளதாக அந்த அதிகாரி கூறினார்.

பிரத்தியேக மருத்துவக் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் டிப்றிவனை மருத்துவமனைக்கு வெளியே வீடொன்றில் உபயோகிப்பது சட்டவிரோதமானதாகும் என மருத்துவர் ஒருவர் தெரிவித்தார். (ஓ-6)

# வடகொரியாவுடன் நிபந்தனையுடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா இணக்கம்

(வோஷிங்டன்)

வடகொரியாவுடன் நிபந்தனையுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க அதிகாரி அயர் கெல்லி நிருபர்களிடம் கூறுகையில்,

வடகொரியா சில பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. நாங்கள் இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயாராக இருக்கிறோம். ஆனால் 6 நாடுகளின் பேச்சுவார்த்தை அடிப்படையில் இந்த பேச்சு வார்த்தை இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், வடகொரியா செய்யவேண்டிய பணிகள் சில செய்யப்படாமல் இருக்கின்றன. அவை என்ன என்பது அவர்களுக்குத் தெரியும். அதை செய்யாமல் அவர்களது கோரிக்கையை ஏற்கமாட்டோம் என்றும் கூறினார். (ஓ-6)

# சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு தாய்நாடு திரும்ப பணமும், இலவச விமான பயணச் சீட்டும்

## பிரான்ஸ் ,பிரித்தானியா கூட்டு நடவடிக்கை

பிரித்தானியாவுக்குள் நுழையும் முகமாக பிரான்ஸில் காத்திருக்கும் சட்டவிரோத குடியேற்றவாசிகளை அவரவர் நாடுகளுக்கு திருப்பி அனுப்பும் வகையில் [illegible] ஒவ்வொருவருக்கும் ஆயிரத்து 700 ஸ்ரேலிங் பவுண் பணமும் இலவச விமானப் பயணச் சீட்டும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸ் மற்றும் பிரித்தானிய பொதுமக்களின் வரிப்பணத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் குளோபல் கலெய்ஸ் திட்டத்தின் கீழ் இதற்கான செலவினம் ஈடுசெய்யப்படவுள்ளது.

எனினும் இது வறிய நாடுகளைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் பிரான்சை நோக்கி கவரப்பட்டு வருவதற்கு வழிவகை செய்யலாம் என திங்கட்கிழமை இரவு நடைபெற்ற கூட்டத்தில் அச்சம் தெரிவிக்கப்பட்டது.

எதுவித உத்தியோகபூர்வ ஆவணங்களுமின்றி பணம் வழங்கப்படுவதால் குற்றவாளிகளும் இதனை சாதகமாக பயன்படுத்தலாம் எனவும் இதன்போது கருத்துக் கூறப்பட்டது. (ஓ-6)

# அட்லாண்டிக் பெருங்கடலில் படகு கவிழ்ந்து 15 பேர் பலி

(புரோவிடென்சியல்ஸ்)

அமெரிக்கா அருகேயுள்ள கரீபியன் கடல் பகுதியில் ஹெய்ட்டி நாடு உள்ளது இந்த நாட்டை சேர்ந்தவர்கள் டர்க்ஸ் கெய் சன் தீவில் தங்கியுள்ளனர் இவர்கள் தங்களது நாட்டுக்கு மீண்டும் குடி பெயர்ந்தனர். அதற்காக ஒரு படகில் 200க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.

அட்லாண்டிக் பெருங்கடல் மேற்கு ஜெய்காஸ் தீவுக்கு அருகே நடுக்கடலில் சென்ற போது திடீரென படகு கவிழ்ந்தது. எனவே இதில் பயணம் செய்தவர்கள் தத்தளித்தனர். இதைப் பார்த்த அமெரிக்க கடல் ரோந்து படையினர் கப்பலில் விரைந்து வந்து தண்ணீரில் தத்தளித்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இருந்தும் 15 பேர் தண்ணீரில் மூழ்கி பலியானார்கள் இவர்களின் சடலங்கள் கரை ஒதுக்கியுள்ளது.

கடலில் மூழ்கியவர்களில் 118 பேர் மீட் கப்பட்டனர். 67 பேரின் கதி என்ன என்று தெரியவில்லை.படகு கவிழ்ந்த அட்லாண்டிக் பெருங் கடல் பகுதி சுறா மீன்கள் நிறைந்தது. இருந்தாலும் அவர்களை மீட்கும் பணியில் ரோந்து படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (ஓ-6)

## எண்டவர் விண்கலம் நாளை தரையிறங்கும்

கடந்த வாரம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அமெரிக்காவின் எண்டவர் விண்கலம் சென்றது. 5 பேர் அதில் சென்றனர். ஏற்கனவே 6 பேர் விண்வெளி மையத்தில் தங்கியிருந்தனர். விஞ்ஞானிகளும் பல்வேறு பணிகளை மேற்கொண்டனர். 5 தடவை அவர்கள் விண்ணில் நடந்து விண்வெளி நிலைய பாட்டரிகளை மாற்றினார்கள். விண் வெளி மையத்தில் பொருத்த ஒரு பிளாட்பாரம் ஒன்றை ஜப்பான் தயாரித்திருந்தது. அதையும் விஞ்ஞானிகள் பொருத்தினார்கள்.

அத்துடன் பணிகள் முடிந்து விட்டதால் 5 பேருடன் எண்டவர் விண்கலம் நேற்று முன் தினம்மாலை பூமிக்கு புறப்பட்டது. நாளை வெள்ளிக்கிழமை புளோரிடாவில் உள்ள கென்னடி சர்வதேச விண்வெளி ஆய்வு மைய விமான தளத்தில் எண்டவர் தரை இறங்கும். (ஓ-6)

# தரம் 05–புலமைப் பரிசில் பரீட்சை –2009

தயாரிப்பு : ஆரம்பக்கல்வி அலகு
கல்வி அபிவிருத்திப் பிரிவு
யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## வினாத்தாள் 02

(பரீட்சை இலக்கம் 10)

நேரம் :-1 மணி 15 நிமிடம்

கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

வண்ண வண்ணப் பூக்களா
வானில் சிதறும் தீப்பொறி
விண்ணில் வாண வேடிக்கை
விழா வென்றாலே வாடிக்கை.

வில்லிலிருந்து அம்பு போல்
வேகமாக உயரமாய்
செல்லும் காட்சி அழகுதான்
சிதறும் வெள்ளிப் பூக்கள் தான்

அந்தரத்தில் சிதறிடும்
அந்தப் பூக்கள் யாவுமே
எந்த இடத்தில் உதிர்ந்ததோ?
எங்கும் இல்லை, மாயந்தான்

எட்டுத் திக்கும் அலறிட
இடியைப் போல வெடித்திடும்
குட்டித் தம்பி நடுங்குவான்
காட்சி கண்டு மகிழுவான்.

ஊர் முழுக்க ரசித்திட
உயர்ந்த வானில் தெரியுது
தேர் இழுக்கும் விழாவிலே
கண்டு நாமும் மகிழலாம்.

1. தீப்பொறி வானில் சிதறிய விதம் எவ்விதம் காட்சி தந்தது?
2. எக் காட்சியை 'அழகு' என்று கவிஞர் குறிப்பிடுகின்றார்?
3. குட்டித் தம்பி நடுங்குவதன் காரணம் யாது?
4. இப்பாடலில் வரும் அடுக்கு மொழி ஒன்று எழுதுக?
5. இப்பாடலில் வந்துள்ள பெயர் அடைமொழி ஒன்று எழுதுக?
6. இப்பாடலை இயற்றியவர் யார்?

☼பின்வரும் ஒவ்வொரு தமிழ் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

7. படங்கள்------------------------------------------------
8. தந்தை-------------------------------------------------
9. சந்தை ------------------------------------------------
10. பாடசாலை----------------------------------------------

☼ பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச்சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

11. Computer ------------------------------------
12. Dhal -------------------------------------------
13. Sunflower -----------------------------------
14. Sea-------------------------------------------------

☼பின்வரும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ப்பத்தை எழுதுக.

15. புஸ் (த்) த காலய ------------------------------------
16. ரோஹல-------------------------------------
17. கொஸ்ஸ-----------------------------------
18. பனஹ-------------------------------------

☼பின்வரும் ஒவ்வொரு சொற்களுக்கும் எதிர்க்கருத்துச் சொல் எழுதுக.

19. உதயம் ------------------------------------
20. இளமை------------------------------------
21. இக்கரை------------------------------------
22. குற்றவாளி-----------------------------------

☼பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

23. கூவம் ------------------------------------
24. ஒப்பந்தம்------------------------------------
25. மிடி------------------------------------
26. அறிவுரை------------------------------------

☼கீழே தரப்பட்டிருக்கும் உரைப் பகுதியை கவனமாக வாசித்து அதன் கீழ் தரப் பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை எழுதுக.அமெரிக்கா தேசத்தில் கெந்தக்கி என்னும் ஓர் ஊர் உண்டு. அந்த உரில் ஒரு சிறுவன் பிறந்தான். அவன் பெயர் ஆபிரகாம் லிங்கன். அவனுடைய பெற்றோர்வறியவர்கள். பெற்றோருடன் சேர்ந்து லிங்கனும் வயலில் வேலை செய்வது வழக்கம். அதனால் அவன் பாடசாலைக் குச் சென்று கல்வியைக் கற்க இயலாதவனாக இருந்தான். ஆனால்அவனிடம் படிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. அவன் ஓய்வு நேரத்தில் பிறரிடம் புத்தகங்களை இரவல் வாங்கிப் படிப்பான். அடக்கமும் நேர்மையும் உள்ள ஆபிரகாம் லிங்கன் பிற்காலத்தில் அமெரிக்க தேசத்தின் ஜனாதிபதியானான்.

27. ஆபிரகாம் லிங்கன் எந்த ஊரில் பிறந்தார்?
28. அவனிடம்உங்களுக்கப் பிடித்த குணங்கள் எவை?
29. லிங்கனுடைய பொழுது போக்கு யாது?
30. லிங்கனால் ஏன் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க முடியவில்லை?
31. பிற்காலத்தில் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாவதற்கு காரணமாக அமைந்தது எது?
32. தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியின் பெயர்யாது?


பின்வரும் அட்டவணையில் முதலாவது நிரையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ் வொரு நோய்களுக்கும் காரணமாக கருதக்கூடிய நோய்களை இனங்கண்டு அதற்குரிய வெற்றுக்கூட்டிலே (x) என அடையாளத்தை இடுக.

| நோய் | எலி | பன்றி | நாய் | நுளம்பு | இலையான் (ஈ) |
|---|---|---|---|---|---|
| 33.பன்றிக்காய்ச்சல் | | | | | |
| 34. பிளேக் | | | | | |
| 35.வாந்திபேதி | | | | | |
| 36.மலேரியா | | | | | |
| 37.யானைக்கால் | | | | | |
| 38. நீர்வெறுப்பு | | | | | |

☼கீழே தரப்பட்டுள்ள "A"பகுதிக்கு பொருத்தமான சொல்லை "B" பகுதியில் இருந்து தெரிவு செய்து இணைக்கவும்.

| | A | B |
|---|---|---|
| 39. | நீர்வீழ்ச்சி | தியலும |
| 40. | இரசாயனவளமாக்கி | மகாசேனன் |
| 41. | மின்னேரியாக் குளம் | யூரியா |
| 42. | தலதா மாளிகை | விட்டமின் (A) |
| 43. | மாலைக்கண் நோய் | கண்டி |


☼ பின்வரும் ஆரம்ப விஞ்ஞான செயற்பாட்டு படம் ஒன்று தரப்பட்டுள்ளது. அச்செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் பெயர்களை எழுதுக.





44. ------------------------------------
45. ------------------------------------
46. ------------------------------------
47. ------------------------------------
48. ------------------------------------


☼அடைப்புக்குள் வரவேண்டிய சொல்லை அருகில் தரப்பட்டுள்ள படத்தை வைத்து நிரப்புக.

49.




☼ வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய உருவை அருகில் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

50. 




உருவில் நிழற்றியுள்ள பின்னத்தை வெற்றுக்கோட்டில் எழுதுக.

51. 

52. 


------------------------------

53. 

------------------------------


------------------------------


☼ தரப்பட்டுள்ள உருவத்துடன் தொடர்பட்ட பொருளை இனங்கண்டு அதன் கீழ் கோடிடுக.

54. 


1. பழம், அப்பிள்
2. மரம், இலை
3. குடை, ஆடை

☼ கீழே தரப்பட்ட உருக்களை தளவாடியில் பார்க்கும் போது தோன்றும் விதத்தினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

55. 

56 

☼மொத்த விற்பனை நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள விலைப் பட்டியல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.அதனை நன்கு அவதானித்து வினா இலக்கம் 57 முதல் 61 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

விலைப்பட்டியல்

| பொருள் | ரூபா | சதம் |
|---|---|---|
| 1 கி.கி. சீனி | 65 | 00 |
| 1 கி.கி. மா | 90 | 00 |
| 100g பூடு | 30 | 00 |
| 100 g தேயிலை | 40 | 00 |
| 1 *l* தே.எண்ணெய் | 320 | 00 |
| 1 *l* மண்எண்ணெய் | 57 | 00 |
| 1 லக்ஸ் சோப் | 24 | 00 |
| 1 சன்லைட் | 23 | 00 |
| 1 கி.கி உப்பு | 40 | 00 |
| 1 தீப்பெட்டி | 5 | 00 |

விலைப்பட்டியல்

| பொருள் | ரூபா | சதம் |
|---|---|---|
| 1 m சீத்தை | 65 | 00 |
| 1 m பப்ளின் | 60 | 00 |
| 1 துவாய் | 250 | 00 |
| 1 சேர்ட் | 700 | 00 |
| 1 பெனியன் | 110 | 00 |
| 1 சாரம் | 420 | 00 |
| 1 நூல் பந்து | 60 | 00 |
| 1 m நாடா | 10 | 00 |
| 1 ஊசி | 5 | 00 |
| 1 நுளம்பு வலை | 800 | 00 |

மேலே தரப்பட்டுள்ள விலைப்பட்டியலைக் கொண்டு சிட்டையை பூர்த்தி செய்க.

| | | பொருள் | ரூபா | சதம் |
|---|---|---|---|---|
| 57. | 1 1/2 | கி.கி.சீனி | | |
| 58. | 5 | கி.கி மா | | |
| 59. | 3 | சன்லைட் | | |
| 60. | 5 | தீப்பெட்டி | | |
| 61. | | மொத்தம் | | |


62.கடைக்காரனிடம் ஐந்நூறு ரூபா தாள் காசு ஒன்றும் நூறு ரூபா தாள் காசு இரண்டும் கொடுத்து மேலே உள்ள சிட்டையில் உள்ள பொருளை வாங்கினால் மிகுதியாக எவ்வளவு பணம் கிடைக்கும்?--------

| | | பொருள் | ரூபா | சதம் |
|---|---|---|---|---|
| 63. | 2m | சீத்தை | | |
| 64. | 21/2 | பப்ளின் | | |
| 65. | 3 | நூல் பந்து | | |
| 66. | 5 | நாடா | | |
| 67. | | மொத்தம் | | |

68. தரம் - 5 வகுப்பு மாணவர்களில் அலரி, ரோஸ், தாமரை, அல்லி, லில்லி மலர்களை விரும்பும் மாணவர் தொகை அருகில் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| அலரி | தாமரை | ரோஸ் | அல்லி | லில்லி |
|---|---|---|---|---|
| 04 | 10 | 15 | 08 | 03 |

மேலே குறிக்கப்பட்ட தகவலை நிரல் வரைபில் குறித்துக் காட்டுக.

69. 


ஒரு நாள் மழை சோ எனப் பொழிந்து கொண்டிருந்தது. அப்போது தெரு ஓரமாக ஒரு நாய்க்குட்டி அழுது கொண்டு இருந்தது. அதனைக் கண்ட நான.... இதைத் தொடர்ந்து எழுவாய் பயனிலையுடன் நான்கு சொற்களுக்கு குறையாமல் ஆறு வாக்கியங்கள் எழுதுத்துப் பிழையின்றி புள்ளிக் கோட்டில் எழுதுக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

## வினாத்தாள் 01 இன் விடைகள்

1. 2 2. 2 3. 4 4. 3 5. 2 6. 3 7. வனம்,காடு 8. ஒளி வெளிச்சம் 9. ஈகை கொடை
10. 1 11. 1 12. 3 13.2 14. 2 15.1 16.2 17.3 18.3 19.2
20.2 21.2 22. 2 23.1 24.3 25.2 26.1 27.1 28. 29.
30. 31.1.6ஆம் திகதி 32.3 33.2 34.1 35.3 36.110 m 37.2 38.1 39.3 40.2

# செங்கல்பட்டு முகாமிலிருந்து 17 இலங்கை அகதிகள் விடுதலை

கடந்த இரண்டரை ஆண்டுகளாக செங்கல்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 இலங்கை அகதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து அவர்கள் மேற்கொண்டு வந்த காலவரையற்ற உண்ணாவிரதம் முடிபுக்கு வந்துள்ளது. தமிழகத்திற்கு அகதிகளாக வரும் இலங்கைத் தமிழர்களில் குற்றப் பின்னணி உடையவர்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த முகாமில் அடைக்கப்பட்டுள்ள 86 அகதிகள் தங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டையும் பதிவு செய்யாமல் வைத்திருப்பதைக் கண்டித்தும் அகதிகள் முகாமின் கொடூரமான சூழ்நிலையைக் கண்டித்தும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து உண்ணாவிரதம் இருந்து வந்த சிலரின் உடல்நிலை மோசமானதால் சர்ச்சை ஏற்பட்டது.

இந்த நிலையில் 18 அகதிகளை விடுதலை செய்ய நேற்று முன்தினம் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதையடுத்து உண்ணாவிரதத்தைக் கைவிட சம்பந்தப்பட்டவர்கள் முடிபு செய்தனர்.

முதல் கட்டமாக நேற்று முன்தினம் 17 அகதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இனி பொது முகாம்களில் இருந்தபடி மற்ற அகதிகளைப் போல் வெளியில் போய் வேலை பார்க்க அனுமதிக்கப்படுவார்கள்.

இவர்கள் தவிர மேலும் 60 அகதிகளும் படிப்படியாக விடுதலை செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# டில்லியில் பலத்த மழை ; 13 பேர் உயிரிழந்துள்ளனர்

(புதுடில்லி)

டில்லியில் பெய்த பலத்த மழை காரணமாக, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் தண்ணீர் தேங்கியதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.



பலத்த மழை காரணமாக நொய்டா மற்றும் டில்லியில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். தலைநகர் டில்லியில் கடந்த திங்கட் கிழமை இரவு பலத்த மழை பெய்தது. விடிய, விடிய கொட்டித் தீர்த்த கனமழையால் டில்லி நகரம் தண்ணீரில் மிதந்தது.

நேற்று முன்தினம் காலை வரை 12.6 செ.மீ. மழை பெய்தது. பல இடங்களில் கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டதால், குடியிருப்பு பகுதிகளிலும் வீதிகளிலும் குளம் போல் நீர் தேங்கிக் கிடந்தது.

துவாரகா, மூல்சந்த், சுல்தான்புரி, லஜ்பத் நகர், சரிதா விகார், மகாராணி பாக் ஆகிய பகுதிகள் மழைநீரில் மிதந்தன. கன்னாட் பிளேஸ், கிரேட்டர் கைலாஸ் போன்ற பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து சென்றன. டில்லிக்கு வரும் அனைத்து வழிகளிலும் வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதனால், பொது மக்கள் பெரும் அவதிக்கு ஆளாயினர். டில்லி மற்றும் அதன் சுற்றுப் புற பகுதியில் பெய்த பலத்த மழைக்கு சப்னா என்ற சிறுமி உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை டில்லி அருகே உள்ள நொய்டாவிலும் பலத்த மழை பெய்தது. இங்கு வீட்டுச் சுவர் இடிந்து விழுந்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலர் காயமடைந்தனர்.

இங்கு மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதற்கிடையே டில்லியில் மேலும் மழை நீடிக்கும் என டில்லி வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது. (ஓ-6)

# பிரபல வில்லன் நடிகர் ராஜன் பி.தேவ் மரணம்



பிரபல மலையாள வில்லன் நடிகர் ராஜன் பி.தேவ் (54) சூரியன் படம் மூலம் தமிழில் அறிமுகமானார். 'ஜெண்டில்மேன்', 'லவ் ருடே' உட்பட பல படங்களில் நடித்துள்ளார்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளில் 520க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து இருக்கிறார்.

நீரிழிவு நோயால் அவதிப்பட்ட ராஜன் பி.தேவ் சொந்த ஊரான எர்ணாகுளம் அருகே உள்ள அங்கம்மாள் கிராமத்தில் ஓய்வு எடுத்து வந்தார்.

இரு தினங்களுக்கு முன்பு இரத்த வாந்தி ஏற்பட்ட நிலையில் மயங்கி விழுந்த அவரை உறவினர்கள் எர்ணாகுளம் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ராஜன் பி. தேவை பரிசோதித்த டாக்டர்கள் நுரையீரல் பாதிக்கப்பட்டு இருப்பதைக் கண்டு பிடித்தனர்.

இதையடுத்து அவர் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார். டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். அவரது உடல் நிலை கவலைக்கிடமாகவே இருந்தது. நேற்று காலை உடல்நிலை மோசமாகி மாரடைப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தார். (ஓ-6)

# சூரிய கிரகண நேரத்தில் போலியோ குழந்தைகளை குப்பைக்குள் புதைத்து சடங்கு

(குல்பர்கா)



கர்நாடக மாநிலம் குல்பர்காவில், போலியோவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை சூரிய கிரகணம் ஏற்படும் நேரத்தில் குப்பையில் புதைத்து சடங்கு செய்வதன் மூலம் அவர்கள் குணமாகி விடுவதாக நம்பப்படுகின்றது.

அதன் பிரகாரம் மக்கள் போலியோவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை, சூரிய கிரகணத் தின் போது குப்பை கூளங்களில் பள்ளம் தோண்டி கழுத்தளவு புதைத்து விடுகின்றனர்.

கர்நாடகா மட்டுமல்லாது அண்டை மாநிலங்களான மகாராஷ்டிரா, ஆந்திராவிலிருந்தும் சிலர் குல்பர்காவுக்கு இந்த சடங்கு செய்வதற்காக மக்கள் வருகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட சூரிய கிரகணத்தின் போது இவ்வாறு புதைக்கப்பட்ட குழந்தைகள் கிரகணம் முடிந்ததும் பள்ளத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு, ஒலிவ் எண்ணெயால் மசாஜ் செய்யப்பட்டனர்.

இது குறித்து இந்த பகுதியை சேர்ந்த துணை கமிஷனர் அன்பு குமார் குறிப்பிடுகையில்,

மூட பழக்க வழக்கங்களை ஒழிக்க எவ்வளவோ பிரசாரங்கள் மேற்கொண்ட போதும் குல்பர்கா மக்கள் தொடர்ந்து இந்த சடங்குகளையே பின்பற்றுகின்றனர் என்றார். (ஓ-6)

# பருவ மழைக்கும் புவி வெப்பமடைவதற்கும் இடையே தொடர்பு இருக்கலாம்

## ஆய்வுகள் தெரிவிப்பு

தெற்கு ஆசிய பிரதேசத்தில் வசிக்கும் சுமார் 150 கோடி மக்களின் வாழ்க்கை தரத்தை நிர்ணயிப்பதில் பருவமழை பெரும் பங்கு வகிக்கிறது.

வழக்கத்தை விட தாமதமாக துவங்கிய பருவமழை - இந்த ஆண்டு தெற்கு ஆசியாவின் பல பகுதிகளில் வழக்கத்தை விட குறைவாகவே மழை பெய்துள்ளது.

ஒட்டு மொத்தத்தில் பார்க்கப் போனால் வழமையை விட மழையளவு பெருமளவில் குறையவில்லை என்று புள்ளி விபரங்கள் தெரிவித்தாலும் இடத்துக்கு இடம் மழையளவு பெருமளவு வித்தியாசப்படுகிறது.

இதற்கு புவி வெப்பமடைவது காரணமாக இருக்குமா என்பது தொடர்பாக இன்னமும் உறுதியான தரவுகள் கிடைக்கவில்லை என்றாலும் பல ஆய்வுகள் இவை இரண்டுக்கும் இடையே தொடர்பு இருக்கலாம் என்று தெரிவித்துள்ளதாகக் கூறுகிறார் சுற்றுச் சூழல் ஆர்வலர் கருணாகரன்.

பருவ நிலை மாற்றத்துக்கான சர்வதேச




பாராளுமன்றக் குழு, புவிக் கோளத்தை பாதிக்கும் பசுமை வாயுக்களின் வெளியீட்டு வீதம் அதிகரிப்பதால் ஆசியாவில் பருவமழை பெய்யும் மாற்றத்தை கணிப்பது மேலும் கடினமாகும் என்று கூறியுள்ளது. இது முற்றிலும் சரி என்கிறார் இந்திய வானிலை மையத்தின் தலைவர் பி.பி யாதவ். (ஓ-6)

# யுத்தத்தால் சகோதரர்களை இழந்ததால் தனிமை தாங்கமுடியாமல் தமிழகம் வந்தேன்

## வவுனியா அகதி தெரிவிப்பு



(இராமேஸ்வரம்)


இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் அண்மையில் நடைபெற்ற யுத்தத்தில் தம்பியும் தங்கையும் இறந்து விட்டதால் அங்கு தனிமை தாங்க முடியாமல் படகோட்டிக்கு ரூ.80 ஆயிரம் செலுத்தி அகதியாக புறப்பட்டு வந்துவிட்டேன் என வவுனியாவைச் சேர்ந்த டினேஸ் (வயது23) கூறியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையிரவு தலைமன்னாரில் இருந்து படகில் புறப்பட்டு இராமேஸ்வரம் வந்த மேற்படி நபர் படகோட்டி களால் தனுஷ்கோடி கடலில் நான்காவது மணல்திட்டில் இறக்கி விடப்பட்டுள்ளார்.

இதுகுறித்து, கடந்த திங்கட்கிழமை காலையில் ஹெலி கொப்டரில் ரோந்து சென்ற இந்திய கடற்படையினர், இராமேஸ்வரம் கடற்படை முகாமுக்கு தகவல் கொடுத்தனர்.

அதன்படி மணல் திட்டில் தனியாக தவித்து கொண்டிருந்த அகதியை, கடற்படை ரோந்து பிரிவினர் மீட்டு இராமேஸ்வரம் கடற்படை முகாமிற்கு கொண்டு வந்தனர். அவரை விசாரணைக்குட்படுத்திய பின்னர் தனுஷ்கோடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ஓ-6)

# சாதனையா ; வேதனையா?



சாதனையா ; வேதனையா? விழுப்புரம் பள்ளி ஒன்றில் நடந்த காமராஜர் பிறந்தநாள் விழாவில் மாணவி மீது மோட்டார் சைக்கிளை ஏற்றி சாகசம் செய்து காண்பிக்கப்பட்டது.

# முன்னர் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை

# பின்னர் வரும் உயர் நீதிமன்றம் மாற்றலாமா?

அரசியல் சாஸ்திரம் படிக்கும் மாணவர்கள் பலரிடம் வினவப்படும் வினாவில் ஒன்று நடைமுறையில் இருக்கும் பாராளுமன்றம் தன்னைத் தானே கட்டுப்படுத்தும் சட்டத்தை இயற்ற முடியுமா? என்பதாகும். இன்னுமொருவினாவும் வினவப்படுகின்து. அது என்னவெனில் நடைமுறையில் உள்ள பாராளுமன்றம் பின்னர் வரும் பாராளுமன்றம் ஒன்றை க்ட்டுப்படுத்தும் சட்டத்தை இயற்றலாமா? என்பதாகும். இதற்கு விடை என்னவெனில் இல்லை என்பதாகும்.

ஏனெனில் சட்டமாக்கும் தத்துவத்தின் மீயுயர் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இருப்பதால் அதனை நடைமுறையில உள்ள பாராளுமன்றம் கட்டுப்படுத்த முடியாது என்பதேயாகும்.

ஆட்சியில் அமரும் அரசாங்கங்கள் கட்சிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு மக்களால் தெரிவு செய்யப்படுவதால் தமது கொள்கைகளுக்கு ஏற்ப வலுவில் உள்ள சட்டங்களை ரத்துச் செய்யவும் ரத்துச் செய்யப்பட்ட சட்டங்களுக்கு பதிலாக புதிய சட்டங்களை இயற்றவும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

இதனாலேயே இயங்கிக் கொண்டிருக்கும் பாராளுமன்றம் தன்னைத்தானே கட்டுப்படுத்தவோ எதிர்காலத்தில் அமையப் போகும் பாராளுமன்றத்தை கட்டுப்படுத்தும் சட்டங்களை இயற்றவோ அனுமதிக்கப்படுவதில்லை.

ஆனால் நீதித்துறையைப் பொறுத்தவரை இந்நிலையில்லை. உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கி விட்டால் அது நடைமுறையில் உள்ள நீதிமன்றங்களையும் அவை வழங்கிய தீர்ப்பையும் கட்டுப்படுத்தும்.

சுருக்கமாகக் கூறுவதானால், முன்னர் உயர்நீதிமன்றம் ஒரு வழக்கில் அளித்த தீர்ப்பை அதே நிகழ்வுகளை (facts) அடிப்படையாக வைத்து அதே வழக்கை பின்னர் அதே உயர்நீதிமன்றம் ரத்து செய்யவோ மாற்றவோ முடியாது. அவ்வாறு மாற்றினால் நீதித்துறையைப் பற்றிய மக்களது நம்பிக்கை சிதைந்து விடும். நீதிமன்றத்தையும் தீர்ப்பையும் மக்கள் நம்ப வேண்டும். இதனை அடிப்படையாக வைத்தே இலங்கை அரசியலமைப்பு வரையப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றமும் இயங்குகிறது.

**உயர் நீதிமன்றம்**

இலங்கை அரசியலமைப்பின் 118 ஆம் உறுப்புரை பின்வருமாறு கூறுகிறது:

"இலங்கைக் குடியரசின் உயர் நீதிமன்றமானது குடியரசில் உள்ள மிக மேலானதும் முடிவானதுமான மேனிலைப்பதிவேட்டு நீதிமன்றம்" என்கிறது.

இலங்கை அரசியலமைப்பின் 119 ஆம் உறுப்புரை பின்வருமாறு கூறுகிறது.

1) "உயர் நீதிமன்றம் பிரதம நீதியரசரையும் ஆறு பேருக்குக் குறையாத அனால் பத்துப் பேருக்கு அதிகமாகாத ஏனைய நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

2) உயர்நீதிமன்றமானது அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமிருப்பினும் செயற்படுவதற்குத் தத்துவமுடையாதாதல் வேண்டும். அத்துடன் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் உயர் நீதிமன்றத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது" என்கிறது.

இலங்கை அரசியலமைப்பின் 127 ஆவது உறுப்புரை பின்வருமாறு அமைந்துள்ளது.

1) உயர் நீதிமன்றமானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால் நியாய சபையால் அல்லது வேறு நிறுவனத்தால் புரியப்பட்ட எல்லா நிகழ்வுப் பிழைகளையும் அல்லது சட்டப் பிழைகளையும் திருத்துதல் தொடர்பில் இலங்கைக் குடியரசுக்காகவும் குடியரசுக்குள்ளும் குடியியல், குற்றவியல் மேன்முறையீட்டு நியாயாதிக்கம் கொண்ட இறுதியான நீதிமன்றமாக, அரசியல் அமைப்புக்கமைய இருத்தல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் கட்டளைகளும் அத்தகைய எல்லா கருமங்களிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முடிவும் முற்றும் ஆனதாக இருத்தல் வேண்டும்" என்கிறது.

மேலே கூறிய உறுப்புரைகளிலிருந்தும் விசேடமாக 127 ஆவது உறுப்புரையிலிருந்தும், விளங்கிக் கொள்வது என்னவெனில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு முற்றும் முடிவானதாகும் என்பதாகும். மிக மேலானதும் முடிவானதாக இருக்கும் என்பதாகும். மேன்முறையீடு இல்லை என்பதாகும்.

இந்நிலையில் எழுகின்ற வினா என்னவெனில் சிலர் கூறுவதுபோல் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அதே உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு / மீளாய்வு செய்ய விதிமுறைகள் அரசியலமைப்பிலோ உயர் நீதிமன்ற விதிகளிலோ உள்ளதா? என்பதேயாகும்.

நான் அறிந்த வரையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பது மூன்று நீதியரசர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நீதியரசர்கள் அமர்ந்து விசாரித்து வழங்கும் தீர்ப்பையே குறிக்கும். அத்தீர்ப்பானது சிலவேளைகளில் ஏகமனதாக இருக்கும்.

சிலவேளைகளில் பிரிவுகளை கொண்டிருக்கும். சில நீதியரசர்களின் தீர்ப்பு ஒன்றாகவும் சில நீதியரசர்களின் தீர்ப்பு வேறு ஒன்றாகவும் இருக்கும்.

கூடுதலான நீதியரசர்கள் என்ன கூறுகிறார்களோ அதுவே அந்த வழக்கின் தீர்ப்பாக இருக்கும். கூடுதலான நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்பை அதற்கு முரணான தீர்ப்பை வழங்கிய நீதியரசர்களும் அங்கீகரித்ததாகவே சட்டம் கொள்ளும்.

உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு ஒன்று உயர் நீதிமன்ற நீதியரசர் குழு ஒன்று வழங்கிய தீர்ப்பாக என்றுமே கொள்ளப்படுவதில்லை. உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாகவே கொள்ளப்படும். ஆகவே அவ்வாறு வழங்கிய உயர் நீதிமன்ற தீர்ப்பு முற்றும் முடிவானதாகும்.

இத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டுக்கு இலங்கை நீதித்துறை அமைப்பில் வேறு ஒரு நீதிமன்றம் இல்லை.

சிலர் மூன்று நீதியரசர் குழு வழங்கிய தீர்ப்பை பின்னர் ஐந்து நீதியரசர் குழு மாற்றலாம் என்று கூறுவதுண்டு. சட்டப் பிழைகளைப் பொறுத்தவரையில் மூன்று நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்பு ஒன்றை வேறு வழக்கில் அதே சட்டப் பிழையை ஆராய வேண்டுமானால் உயர் நீதிமன்றம் ஐந்து பேரை கொண்ட குழுவை நியமித்து விசாரிக்கலாம்.

ஆனால் மூன்று நீதியரசர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை அந்த வழக்கை மீண்டும் உயர் நீதிமன்றத்தில் எடுத்து ஐந்து நீதியரசர்கள் விளங்க அரசியலமைப்பில் இடமில்லை என்றே கூற வேண்டும்.

**சட்டத்தரணி கே.ஜீ.ஜோன்**

(தொடரும்)

# இலங்கையில் முதலிடுவதற்கு பல நாடுகள் முன்வருகை

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கு 2.6 பில்லியன் டொலர் கடன் கிடைத்தமையின் மூலம் சர்வதேச மட்டத்தில் இலங்கை தொடர்பாக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உள்ளிட்ட நாடுகள் இங்கு முதலீடு செய்வதற்கு தயாராகி வருகின்றன. அதனடிப்படையில் நாட்டின் பொருளாதாரம் சிறந்த மட்டத்துக்கு உயர்வடையும் என்று சர்வதேச வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது,

எமக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைத்துள்ளது. இதன் மூலம் நாட்டில் வட்டி வீதம் குறைவடையும். இது வர்த்தகர்களுக்கு சாதகமாக அமையும்.

வெளிநாட்டுத் தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர். முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்கின்றனர். கற்போது சர்வதேச நாணய நிதியம் எமக்கு கடன் வழங்கியதன் மூலம் சர்வதேச மட்டத் தில் எம்மீது நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அதனூடர்க பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உள்ளிட்ட நாடுகள் இங்கு முதலீடு செய்வதற்கு தயாராகி வருகின்றன. இது எமது பொருளாதாரத்தில் வலு சேர்க்கும்.

**கேள்வி :-** 2011 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை 5 வீதமாக குறைக்கப்பட வேண்டும் என்று நாணய நிதியம் கூறியுள்ளதே?

**பதில் :-** நாணய நிதியம் கூறாவிட்டாலும் நாம் அந்த இலக்கத்துக்கு வரவ செலவுத்திட்ட பற்றாக்குறையை குறைக்க வேண்டியுள்ளது.

2010 ஆம் ஆண்டில் பற்றாக்குறையை 6.5 வீதமாக கட்டுப்படுத்துவோம் என்று ஜனாதிபதி கடந்த வரவு செலவுத்திட்ட உரையில் கூறியிருந்தார்.

ஆனால் வரவு - செலவுத்திட்ட பற்றாக் குறையை 7 வீதம் வரை கொண்டு செல்லலாம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளதை நாம் பார்க்க வேண்டும். ஆரம்பத்தில் பல அழுத்தங்கள் நாணய நிதியத்தால் விதிக்கப்படும் என்று கூறப்பட் டது. ஆனால் எந்த விதமான அழுத்தங்களும் இல்லை. (ஓ-6)

# யாழ்ப்பாணத்தில் வாழ்க்கைச் செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாண குடாநாட்டில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் என்ற திட்டத்தின் கீழ் வாழ்க்கைச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஏ9 வீதியை பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டு வருவதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தற்போது பொருட்களை இடம் நகர்த்துவதற்கு கப்பல் கட்டணமாக அதிக பணம் செலவிடப்படுவதாகவும் தரைவழிப் போக்குவரத்தின் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளாார். (ஓ-6)

# தென் மாகாண சபை அடுத்தவாரம் கலைப்பு

தென் மகாண சபை அடுத்த வாரம் கலைக்கப்படும். ஊவா மாகாண சபை தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னதாகவே நாங்கள் தென் மாகாண சபை தேர்தலுக்கு ஆயத்தமாக வேண்டியுள்ளது.

சவாலான தேர்தல் ஒன்றுக்கு தயாராகுமாறு ஐக்கிய தேசிய கட்சிக்கு அழைப்பு விடுகின்றோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொ்ணடு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

ஊவா மகாண சபை தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறுவதற்கு முன்னர் தென் மாகாண சபை கலைக்கப்பட்டு விடும். அந்த தேர்தலுக்கு நாங்கள் தயாராக வேண்டியுள்ளது. சவாலான மற்றுமொரு தேர்தலை எதிர் கொள்ள தயாராகுமாறு எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

தென் மாகாண சபையில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளர்கள் குழுவை தெரிவு செய்து விட்டோம். பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. தென் மாகாண சபை தேர்தலிலும் நாங்கள் பாரிய வெற்றியைப் பெறுவோம் என்றார். தொடர்ந்து கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

**கேள்வி :-** தென் மாகாண சபையின் ஆளும் கட்சி முதலமைச்சர் வேட்பாளர் யார்?

**பதில் :-** அதனை வேட்புமனு தாக்கலின் பின்னர் கூறுவோம்.

**கேள்வி :-** எந்த திகதியில் தென் மாகாண சபை கலைக்கப்படும்?

**பதில் :-** அடுத்த வாரம் என்றால் அடுத்த வாரத்தின் ஒரு தினத்தில் கலைக்கப்படும்.

**கேள்வி :-** அண்மைய தேர்தல்களில் அமைச்சர்களின் உறவினர்கள் போட்டியிடுவது அதிகரித்துள்ளதல்லவா?

**பதில் :-** இது ஜனநாயக நாடு. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஓர் ஜனநாயக கட்சி. எனவே தகுதியான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அமைச்சரின் உறவினர் என்பதால் ஒருவர் தகுதியானவரும் அல்லர் ; அதேவேளை தகுதியற்றவரும் அல்லர் எனத் தெரிவித்தார். (ஓ-6)

ஒருவன் அரசனாக வாழலாம் ஆனால் அவன் மனிதனாகத்தான் மரிக்க வேண்டும்.

~ செஸ்டர்

வலம்புரி

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு சாத்தியம் அற்ற ஒன்று

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் அமைக்கப்பட்ட சர்வகட்சிக்குழு தனது இறுதி அறிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் விரைவில் கையளிக்கவுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த இறுதி அறிக்கையில் ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழித்து நாடாளுமன்ற ஆட்சிமுறையை அமுலடுத்த வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை அமுலுக்கு வந்து முப்பது வருடங்கள் கடந்துவிட்டன.

இந்த முப்பது வருடகாலத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும் என்ற கருத்து ஒலித்துக்கொண்டே இருக்கிறது. எனினும் இன்றுவரை அது சாத்தியப்பட வில்லை. அவ் விதம் சாத்தியப்படாமல் இருப்பதற்கு அடிப் படைக்காரணம் ஜனாதி பதிக்கு இருக்கக்கூடிய மிக உன்னதமான அதிகாரம் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றும் அதிகாரத்தை தவிர மற்ற எல்லா அதிகாரமும் ஜனாதிபதிக்குண் டென காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறியமை இங்கு நோக்குதற்குரியது.

எனவே ஜனாதிபதியாக இருப்பவர் அந்தப் பதவியை இல்லாது செய்வதற்கு விரும்பா விடில் ஜனாதிபதி ஆட்சிமுறை எக்காலத்திலும் ஒழிக்கப்படமுடியாதொன்று என உறுதிபட கூற லாம்.

இதில் வேடிக்கை என்னவெனில் இரண்டு தடவைகள் ஜனாதிபதி ஆட்சியில் இருந்த சந்திரிகா குமாரதுங்க மூன்றாவது தடவை ஜனாதிபதியாவதற்கு சட்டத்தில் இடமில்லாத நிலையில், தன்னுடன் ஜனாதிபதி ஆட்சி முறை யை ஒழிக்க முற்பட்டார்.

இதற்காக அவர் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க வின் ஆதரவை நாடினார்.

இருந்தும் அந்த முறை ஜனாதிபதி ஆகும் வாய்ப்பு தனக்குண்டென அனுமானித்துக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு ஆதரவுதர மறுத் தார்.

எனினும் அவரின் துரதிர்ஷ்டம் வடக்கு கிழக்கு மக்கள் அப்போது ஜனாதிபதி தேர்தலை புறக் கணிக்க மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆனார்.

இங்குதான் சந்திரிகா குமாரதுங்கவும், ரணில் விக்கிரமசிங்கவும் வரலாற்றுத் தோல் வியை சந்தித்துக் கொண்டனர்.

இப்போது திஸ்ஸ விதாரண தலைமையி லான சர்வகட்சிக்குழு ஜனாதிபதி ஆட்சி முறை யை ஒழிக்கவேண்டுமென கூறுகிறது.

இன்னுமொருதடவை சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி ஆட்சியிலிருக்கும் சந் தர்ப்பத்திலும், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி சர்வ நிச்சயம் என்ற முடிவிலும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆட்சிக்கு முடிவு கட்டுவாரா... என்ன?

# அகதி முகாம்களில் உள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

## மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு)

யுத்தம் காரணமாக அகதி முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ள சுமார் 2 இலட்சத்து 80 ஆயிரம் பொதுமக்களை இலங்கை அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்யவேண் டும் என மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை விடுத் துள்ளது.

அகதி முகாம்களில் தமிழ் பொதுமக்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளது குற்றம் சுமத்தியுள்ளது. உக்கிர மோதல்களின் காரணமாக 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் அர சாங்க கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் தஞ்சமடைந்த பொதுமக் களை அரசாங்கம் தடுத்து வைத்துள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அகதிகளை சுதந்திரமாக இடம் நகர்வதற்கான உரிமை மறுக்கப்பட்டதன் மூலம் சர்வதேச சட்டங்களை அரசாங்கம் மீறியுள்ளதாகவும்,

அகதி முகாம்களில் உள்ள சொற்பளவான முதியவர்க மட்டுமே இதுவரையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது. ஏனைய இலங்கையர்களைப் போன்றே அகதிகளும் சுதந்திரமாக வாழ உரித்துடையவர்கள் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிரிய பிராந்திய பணிப் பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 17ஆம் திகதி இரா ணுவ பாதுகாப்புடன் கூடிய 30 முகாம்களில் 2இலட்சத்து 81 ஆயிரத்து 621 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட் டுள்ளார்.

அவசர மருத்துவத்தேவைகளுக்காக மட்டுமே குறித்த மக் கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதாக அவர் தெரிவித் துள்ளார். (இ-6)

# சிறுவர்களுக்கு ஆபத்தான நாடாகவே இலங்கை உள்ளது

## சிறுவர் அமைப்பு குற்றச்சாட்டு

போர் முடிவுக்கு வந்திருக்கின்ற போதிலும் சிறுவர்களுக்கு ஆபத்தான ஒரு நாடாக இலங்கை உள்ளது என சிறுவர்களைப் படைக்குப் பயன்படுத்துவதற்கு எதிரான கூட்டமைப்பு வெளி யிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றது.

பலாத்காரமாக படைகளுக்கு சேர்த்துக் கொள்ளல் எழுந்த மானமாகத் தடுத்து வைத்தல் உட்பட பல்வேறு விதமான மனித உரிமை மீறல்களைச் சிறுவர்கள் தொடர்ந்தும் எதிர் கொள்ள வேண்டியிருப்பதாக இந்த அமைப்பினால் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவித் திருக்கின்றது.

சிறுவர்களும் ஆயுதப் பிணக்கும் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் செயற்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அதனைத் தெரிவித்துள்ள கூட்டமைப்பு போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் களைப் பாதுகாப்பதற்கு உடனடியாக செயற்பட வேண்டும் என அரசை வலியுறுத்தியிருக்கின்றது.

வவுனியா மெனிக்பாம் முகாமில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றையிட்டும் இந்த அறிக்கை விபரித்திருக்கின்றது.

இந்த முகாமில் இருந்த நான்கு அல்லது ஐந்து சிறுவர் கள் சிறுமிகள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத் திருக்கிறார்கள் என படையினரால் தடுத்து வைக்கப்பட்டு விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதில் ஒரு சிறுமி தான் விடுதலைப் புலிகளுடன் இரண்டு நாட்கள் இருந்ததாக தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அந் தச் சிறுவர்கள் அனைவரும் அங்கிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் அதன் பின்னர்கிடைக்கவில்லை. இலங்கையில் பெருந்தொகையானோர் காணாமல் போய் இருப்பதன் பின்னணியில் இடம்பெயர்ந்தவர் களுக்கான முகாம்களில் இருந்து இவ்வாறு சிறுவர்களும் வயதானவர்களும் அழைத்து செல்லப்படுவது பெரும் அச் சத்தை ஏற்படுத்துவதாகவுள்ளது. என இந்த கூட்டமைப்பின் பணிப்பாளர் விக்ரோரியா போர்பேஸ் அடம் தெரிவித்திருக் கின்றார். (சு-5)

# முப்படையிலிருந்து தப்பிச் சென்றவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடரும்

## கோதபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

முப்படையிலிருந்து தப்பிச் சென்றவர்களை கைது செய் யும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என பாது காப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்பு அடிப்படையில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஆயிரத்து 883 பேருக்கு அண்மையில் விடு தலை வழங்கப்பட்டது.

எனினும், தப்பியோடி மறைந்து வாழும் படை வீரர்களை தேடிப் பிடித்து கைது செய்யும் நடவடிக்கைகள் கைவிடப்பட மாட்டாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இராணுவப் படை வீரர்களுக்கென ஓர் ஒழுக்க விதிகள் காணப்படுவதாகவும் அதனை மீறிச் செயற்படும் வீர ருக்கு எவ்வித மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முப்படையிலிருந்து சட்ட ரீதியாக விலகிச் செல்ல சந்தர்ப் ப்ம் அளிக்கப்பட்ட போதிலும் அதனை குறித்த படை வீரர்கள் உதாசீனம் செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-6)

# அமெரிக்க தூதுவரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண் டிருந்த அமெரிக்க உதவித் தூதுவர் பருத்தித்துறை பங்குத் தந்தை ரெக்னோவை சந்தித்துள்ளார்.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட பரு .சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அமெரிக்கத் தூதுவரிடம் மகஜர் ஒன்றை கையளித்திருந்தார்.

இம் மகஜரில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களை அவர்களது சொந்த இடங்களில் தங்க வைப்பதற் கான துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குறிப் பிட்டிருந்தார்.

அத்துடன் அரசியல் தலையீடு இன்றியும் வடக்கு கிழக்கு பேதமின்றியும் தமிழ் மக்களின் வாழ்வு உயர வழி வகுக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (இ)

# சொல்வதை செய்பவருண்டோ -பாபா

இன்றைய மனித சமுதாயம் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதை சுவாமி தனது பள்ளிப் பிராயத்தில் தானே ஒரு நாடகம் எழுதி அதில் தானும் நடித்திருந்தார்.

அந்த நாடகத்தின் பெயர் " சொல்பவையெல்லாம் செய் யப்படுகின்றனவா" ? அந்த நாடகம் பல வருடங்களுக்கு முன் எழுதப்பட்டிருந்தாலும் அதன் கருத்துக்கள் இன்றைய காலத் திற்கும் பொருந்துபவையாகவே இருக்கின்றன.

முதல் காட்சியில் பெண் மணி ஒருவர் தன்னை ஒரு இறை வனின் அடியார் என விளம்பரம் காட்டி கதா காலாட்சேபம் செய்கின்றார். பார்வையாளர்களிடம் உங்கள் தான தர்மத்தை நல்ல ஆரோக்கியமான பிச்சைக்காரர்களுக்கும் சோம்பேறிக ளுக்கும் கொடுத்து வீணாக்காதீர்கள் அதற்குப் பதில் ஊன முற்றவர்கள், வயதானவர்கள் என்பவர்களுக்கு உதவி செய் யுங்கள் காலாட்சேபம் முடிந்ததும் கூட்டம் கலைந்து செல் லும். அவ் வேளை கண் தெரியாத ஒருவர் பிச்சை கேட்டு அவளிடம் வருவார். உதவும்படி கெஞ்சுவார். அவளுக்கு பெரும் கோபம் வந்துவிடும் அவரை விரட்டி விடுவாள். சில நிமிடங்கள் கழித்து தன்னை நன்றே அலங்கரித்த ஒருவர் வந்து விழா ஒன்றினை நடத்த நிதியுதவி கோர அவரை உள்ளே அழைத்து உபசரித்து ஒரு தொகைப் பணத்தையும் வழங்குகின்றார்.

அவளுடைய மகள் இதனைக் கண்டு அம்மா! ஆன் மீகச் சொற்பொழிவின் போது என்ன சொன்னாய் இப்போது நீங் கள் செய்வது என்ன ? வந்ததே கோபம் அவளுக்கு வாயை மூடு யாராவது சொன்னபடி செய்கிறார்களா என்றாள்.

அடுத்த காட்சியாக அவனது தந்தையார் கல்வியின் சிறப் பையும் கல்வி கற்க முடியாமல் இருக்கும் ஏழைச்சிறார்க ளுக்கு நாம் பணமோ பொருளோ கொடுத்துதவ வேண்டும் என்று தனது அலுவலக நண்பர்களிடம் கூறுகின்றார். யன்னல் ஓரமாக இருந்து இதனைக் கேட்ட ஒரு ஏழைச் சிறுவன் உள்ளே வந்து ஐயா ! உங்களைப் போன்றோ ரின் உதவியால் தான் படித்து வருகிறேன். இம்மாதம் பள்ளிக்கு பணம் கட்ட முடியாதுள்ளது. உதவி செய்வீர்களா எனக் கேட்கிறான்.



உடனடியாக அவர் என்னிடம் ஒரு சதம் கூட இல்லை என் கிறார். அடுத்த நிமிடம் புதிதாக வந்த ஓர் உத்தியோகத்தரை வர வேற் பதற்காக அவரது தந்தையார் ஒரு தொகைப் பணத்தை வழங் குகின்றார். இதனைக் கண்ணுற்ற மகன் அப்பா சொல் வது ஒன்று செய்வது பிறிதொன்று என்றான். தந்தை யாரும் எப் போதாவது மனிதர் சொன்னதை செய்ததைப் பார்த்திருக் கின்றாயா என்றார் இது தான் உலகம். திருந்துவது எப்போது என்பது தான் இறைவனின் ஆதங்கம்.

ஜெயசாபிராம் யாதவன்

# வரலட்சுமி பூஜை

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரத பூசைகள் நடைபெறவுள்ளன.

மாலை 2 மணிக்கு சங்கல்பத்துடன் ஆரம்பமாகி மகாலட்சுமிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து தீப பூசை, காப்பு நூல் அணிதல் என்பன இடம்பெறும். (ஓ-36)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வடகிழக்கு கலட்டி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு காலை 9 மணியளவில் மகாலட்சுமி அம்மனுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்வும் சிறப்பு பூசைகளும் தொடர்ந்து சுவாமி உள்வீதி உலாவும் இடம்பெற்று விரத அடியார்களுக்கு நோன்புக்காப்பு (நூல்) வழங்கப்படவுள்ளது. (ஓ)

# சாந்தி ஹோம பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் சிவன் திருக்கோயிலில் வியாழ மாற்றத்தை முன்னிட்டு சாந்தி ஹோம பெருவிழா இன்று வியாழக்கிழமை 8 மணி முதல் 12 மணிவரை நடைபெறவுள்ளது. தோஷமுள்ள நட்சத்திரத்தில் பிறந்தோர் இவ் ஹோமத்தில் பங்கு கொண்டு பங்குகொள்ளலாம் எனவும் பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# பரீட்சை மண்டப இடமாற்றம்

யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் முதலாம் திகதி நடைபெறவிருந்த கமநல சேவைகள் குழு எழுதுநர் சேவையின் 2ஆவது வகுப்பின் வெற்றிடங்களுக்கான விண்ணப்பதாரிகளை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை அதே திகதியில் யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இல் நடைபெறும் என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார். (ஓ)

# செயற்றிறன் மதிப்பீட்டு போட்டி

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையிலான செயற்றிறன் மதிப்பீட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இம் மதிப்பீட்டுக்கு வரும்போது தத்தமது சனசமூக நிலையத் தலைவர் அல்லது செயலாளர் ஆகியோர் சமூகம் கொடுக்குமாறு சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் சகல சனசமூக நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார். (ஓ-29)

# இலங்கைக்கு வெளியே நிகழ்ந்த பிறப்பொன்றைப் பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள, இலங்கைக்கு வெளியே நிகழ்ந்த பிறப்பினை இதுவரை பதிவு செய்யாதவர்கள் பின்வரும் ஆவணங்களுடன் உதவிப் பதிவாளர் நாயகம், வடக்கு வலயம் அவர்களைத் தொடர்புகொண்டு பதிவு செய்யலாம் என யாழ்.அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் விபரம் வருமாறு,

- இலங்கையில் வந்து இறங்கிய இடத்தில் பதிவுகள் ஏதும் செய்திருந்தால் அப் பதிவின் பிரதி.
- கிராம சேவையாளரிடம் வந்து இறங்கியது பற்றி முறைப்பாடு செய்திருந்தால் அம் முறைப்பாட்டின் பிரதி.
- தற்போது வசிக்கும் இடத்தின் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட நிவாரண அட்டையின் பிரதி.
- சம்பந்தப்பட்டவர்கள் அனுமதியின்றி வள்ளத்தின் மூலம் வந்து இறங்கியதை உறுதிப்படுத்தும் பிரதேச செயலரின் கடிதம்.
- தமிழ் நாட்டில் வழங்கப்பட்ட கடிதங்கள் பதிவுச் சான்றுகள் இருப்பின் அவற்றின் பிரதிகள்.
- அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட பதிவு அட்டைகள், நிவாரண அட்டைகள் இருப்பின் அவற்றின் பிரதிகள்.
- பெற்றோரின் விவாகச் சான்று
- பெற்றோரின் பிறப்புச் சான்று
- பிள்ளையின் சகோதரர்களின் பிறப்புச் சான்றுகள்.
- பெற்றோரின் அடையாள அட்டை.
- பெற்றோரின் கடவுச்சீட்டு இருப்பின்.

தொடர்புகொள்ளவேண்டிய அலுவலக முகவரி : உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம், மாவட்டச் செலயகம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021 -222 2475. (ஓ-6)

## தென்மராட்சி கல்வி வலய

# கணித, விஞ்ஞான பாட புதிர் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய மாணவர்களிடையே நடத்தப்பட்ட கணித,விஞ்ஞான பாட புதிர்ப்போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கணிதம் -ஆங்கில மொழி மூலம்**

*தரம்-6*

ஜெ.ஜெயதாரணி, இ.மதூஷா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வி.மதனிகா (மீசாலை வீரசிங்கம் மகா.வித்தி.)

*தரம் -7*

அ.ஜெனீசன் (மீசாலை வீரசிங்கம் மகா. வித்தி.), சி.கிருஷிகா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),ப.கஜீதன் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.)

*தரம்-8*

த.பிரகாஷ்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ.சிந்துஜா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), ஜெ.சந்திரோதயன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம் -9*

இ.தேனுஷன்(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), கு.கபிலன், ஸ்ரீ.கிரி ( சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம்-10*

ச.கௌசிகா, பி.தேனுஜன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),மூன்றாமிடம் இருவர் ச.சஜீவன்,ந.சங்கீதன்(சாவகச்சேரி இந்துக் கல் லூரி).

*தரம் -11*

ம.நிவேதிகா,ப.சங்கீர்த்தனா , த.அனோஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**விஞ்ஞானம்**
**ஆங்கில மொழி மூலம்**

*தரம்-6*

வி.மதனிகா(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), அ.நேதிகா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),தே.தாரகன்(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.)

*தரம் -7*

சி.கிருசிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அ.ஜனீசன்(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), மூன்றாமிடம் இருவர் ப.கஜீதன்(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), ம.ஸ்ரீபன்ராஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம்-8*

இ.சிந்துஜா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.),ஜ.சந்திரோதயன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி),சி.இனோஜா(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.),

*தரம்-9*

ர.தேனுசன்(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), ப.தர்சிகா(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), தே.ஆதிரை (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.),

*தரம்-10*

ச.சஜீதா, உ.தர்சினி, ச.கௌஷிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

*தரம்-11*

த.அனோஜன், நா.தர்ஜிகா, ம.கீதராணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (ஓ-29)

# தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

புதிய செம்மணிவீதி, ஆனந்தபுரம், இருபாலை தெற்கு எனும் முகவரியைச் சேர்ந்த சண்முகராசா சண்முகலிங்கம் என்பவரது 900973209V எனும் இலக்க தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் சமுகமளித்து அலுவலக நேரத்தில் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார். (ஓ-6)

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கலைமதி வி.கழகம் எதிர் சென்சேவியர் வி.கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு சிவானந்தா வி. கழகமும் எதிர் ஆதிசக்தி வி.கழகமும் கால்இறுதி ஆட்டங்களில் மோதவுள்ளன. (ஓ)

# தென்மராட்சி சாரண ஆசிரியர்களுக்கான கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சி சாரணர் கிளைச் சங்கக் கூட்டம் மாவட்ட சாரண ஆணையாளர் செ. சுப்பிரமணியம் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப ஒருமணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பெண்பிள்ளைகளுக்கான சாரணியம் ஆசிரியர்களுக்கான கலைக்கூறு (அவத்தை) பயிற்சிகள் இடம்பெயர்ந்து வந்தவர்களது ஜனாதிபதி விருது மாணவர்களது முதலாம் வகுப்பு சின்னப் பயிற்சிகள் பற்றி கலந்துரையாடப்படும்.

இதனால் தென்மராட்சி பாடசாலை அதிபர்களை தமது சாரணியப் பொறுப்பு ஆசிரியர்களை இந்நிகழ்வில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரவிச்சந்திரனும் இந்நிகழ்வில் கலந்து கொள்வாரென்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)




# பதவியேற்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் லயன்ஸ் கழகத்தின் நடப்பாண்டுக்கான புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்பு வைபவம் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.40 மணிக்கு கோண்டாவில் மேற்கு வேத பாராயண சனசமூக நிலைய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் லயன் லக்ஸ்மன் விஜேசிங்க மற்றும் லயன்லேடி டாக்டர் அனோமா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக முதலாவது உப மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெயவத்சலன்,மாவட்ட ஆளுநரின் ஆலோசகரும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான லயன் எஸ்.ராகவன் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட அமைச்சரவை செயலாளர் லயன் டாக்டர் செபாஜெயமகா, பிரதி அமைச்சரவை செயலாளர்(வடக்கு) லயன் ஸ்ரீபன் லியோனாட், பிரதி அமைச்சரவை பொருளாளர் (வடக்கு) லயன் சி.சுந்தரேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-)

# நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

இந்துசமய கலாசார [illegible]கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடத்தும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00-6.00 மணிவரை ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' எனும் பொருளில் இராசையா ஸ்ரீதரனின் சிறப்புச் சொற்பொழிவும் தொடர்ந்து அராலி கோமாதா,கோகுலம் அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்கள் பங்குபற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ)








கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழாவினை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும், நிலையத்தலைவர் மு.விக்னேஸ்வரன், ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் ஆகியோர் அருகில் நிற்பதை முதலாவது படத்திலும், வினோத உடைப் போட்டியாளர்களுடன் விருந்தினர்கள்,ஆசிரியர்கள் நிற்பதை இரண்டாவது படத்திலும், இடைவேளையின்போது உடற்பயிற்சி கண்காட்சியில் மாணவர்கள் ஈடுபடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:- கோப்பாய் நிருபர்)





யாழ்ப்பாணத்தில் உள்ள நலன்புரி முகாம்களுக்கு விஜயம் செய்த சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாடசாலை மாணவர்களுடனும் மக்களுடனும் கலந்துரையாடுவதை படங்களில் காணலாம்.

# பாக். வீரர் அக்தர் மீண்டும் சர்ச்சையில்



(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொகைப் அக்தர், அணி நிர்வாகத்தை விமர்சித்து புதிய பிரச்சினையில் சிக்கியுள்ளார்.

கடந்த 2008இல் அக்தர் பாகிஸ்தான் கிரிக்கெட் விதிகளை மீறியதற்காக விதிக்கப்பட்ட தடை மற்றும் அபராதத்தை எதிர்த்து இன்னும் நீதிமன்ற படியேறிக் கொண்டுள்ளார்.

இதன் காரணமாகவே அணியிலும் தொடர்ந்து ஓரங்கட்டப்பட்டு வருகிறார். உடற்தகுதியை காரணம் கூறி உலக கோப்பை இருபது-20 தொடர், இலங்கை தொடரில் அக்தர் சேர்க்கப்படவில்லை.

தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் (மினி உலகக் கோப்பை) தொடருக்கான உத்தேச அணியிலும் இவர் தேர்வு செய்யப் படவில்லை.

இது குறித்து கருத்து தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகி,

அக்தர் தனது உடற்தகுதி குறித்து வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என தெரிவித்தது. இதனால் வெறுப்படைந்த அக்தர், பி.சி.பி. நிர்வாகம் தனக்கு எதிராக சதிசெய்கிறது. இதனை சட்டரீதியாக சந்திப்பேன் என டிவியில் கடுமையாக பேட்டி கொடுத்தார்.

இதற்கு பி.சி.பி. செயல் இயக்குநர் ஜாகிர் கான் கூறுகையில்;

கிரிக்கெட் சபை ஒப்பந்த விதிப்படி நிர்வாகத்தின் அனுமதி இல்லாமல் பேட்டி கொடுக்க கூடாது.

ஆனால் அக்தர் அணி நிர்வாகத்தினரை விமர்சித்து பேட்டி கொடுத்துள்ளார்.

இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டு கடிதம் எழுதியுள் ளோம். இதற்கு அவர் நாளைக்குள் பதிலளிக்க வேண்டும் என்றார்.

# முதலாவது ஒருநாள் போட்டியில் இன்று இலங்கை-பாகிஸ்தான் பலப்பரீட்சை



இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி தம்புள்ளையில் இன்று நடைபெறவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை இலகுவாக வெற்றியீட்டிய நம்பிக்கையுடன் இலங்கை அணி ஒருநாள் தொடரில் களமிறங்குகிறது.

ஒருநாள் தொடருக்கான இலங்கை அணியில் வேகப்பந்து வீச்சாளர் தில்ஹார பெர்னாண்டோவும் இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது. இது இலங்கையின் பந்து வீச்சில் மேலும் வலுசேர்க்கும்.

அத்துடன் டெஸ்ட் தொடரில் விளையாடாத முத்தையா முரளிதரன் மற்றும் லசித் மலிங்க ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளனர்.

இது தவிர துடுப்பாட்டத்திலும் இலங்கை அணி வலுவான நிலையிலேயே காணப்படுகிறது.

இந்நிலையில் இலங்கையுடனான ஒருநாள் தொடரிலும் பாகிஸ்தான் அணி தடுமாற அதிக வாய்ப்பு உள்ளது.

இதனிடையே இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டது தொடக்கம் இதுவரை ஒரு வெற்றியைக் கூட பெறாத பாகிஸ்தான் அணி ஒருநாள் தொடரில் முற்றிலும் மாறான அணி ஒன்றையே களமிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சகலதுறை ஆட்டக்காரர்களான சகிட் அப்ரிடி மற்றும் அப்துல் ரஷாக் ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது இலங்கைக்கு சவாலாக அமையும்.

அத்துடன் இலங்கை ஏ அணியுடனான பயிற்சிப் போட்டியில் அபார சதம் பெற்ற உமர் அக்மலுக்கு இன்றைய தினம் தனது முதல் ஒருநாள் போட்டியில் விளையாட வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் இதுவரை 114 ஒருநாள் சர்வதேச போட்டிகள் நடை பெற்றுள்ளன.

இதில் அதிகபட்சமாக பாகிஸ்தான் 68 போட்டிகளில் வெற்றியீட்டியதோடு இலங்கையினால் 42 போட்டிகளிலேயே வெல்ல முடிந்தது.

# உலக நீச்சல் போட்டியில்; 2 நாட்களில் 11 உலக சாதனைகள்



பிரான்ஸின் ரோம் நகரில் நடைபெற்றுவரும் உலக சம்பியன்ஷிப் நீச்சல் போட்டியில் இரண்டு நாட்களுக்குள் 11 உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

இதில் நீச்சல் போட்டிகளின் இரண்டாவது நாளான கடந்த திங்கட்கிழமை மாத்திரம் சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

இதன்படி பெண்கள் பிரிவில் சாரா ஜொஸ்ட்ரோம் (100 மீ.பட்டர்பிளை), அரியானா குகோஸ் (200 மீ. மெட்லே), றொபெக்கா சொனி (100 மீ. பிரிஸ்ட்ரோக்) மற்றும் அனஸ்டாசியா சுவேவா (100 மீ. பேக்ஸ்ட்ரோக்) ஆகியோரும் ஆண்கள் பிரிவில் அவுஸ்திரேலியாவின் பிரென்டன் ரிக்காட் (100 மீ. பிரிஸ்ட்ரோக்) போட்டியிலும் புதிய உலக சாதனை படைத்தனர்.

இதன் போது இரண்டு ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களை வென்றவரும் உலக சாதனைக்கு சொந்தக்காரருமான அரோன் பிரிசோல் (100 மீற்றர் பேக்ஸ்ட்ரோக்) போட்டியின் இறுதிப் போட்டிக்குக் கூட முன்னேறாமல் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

உலக சம்பியன்ஷிப் நீச்சல் போட்டிகள் வரும் ஆகஸ்ட் 2ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை விசேட அம்சமாகும்.

அத்துடன் இதுவரை நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில் சீனா,ரஷ்யா 7 தங்கப்பதக்கங்களுடன் முதலிடத்தை பகிர்ந்து கொண்டுள்ளதோடு ஜேர்மனி 4 தங்கப்பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும் காணப்படுகின்றன.

எனினும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இத்தாலி, பிரித்தானியா ஆகியன தலா 2 தங்கப்பதக்கங்களுடன் 3ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளன.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம் 103





டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 150 விக்கெட்டுக்களை குறைந்த போட்டிகளில் (36) கைப்பற்றிய வீரர்கள் வரிசையில் முரளிதரன் 30ஆவது இடத்தைப் பிடித்தார்.

இந்த வரிசையில் 1913ஆம் ஆண்டு இங்கிலாந்து வீரர் வார்னஸ் 24 போட்டிகளில் 150 விக்கெட்டுக்களை கைப்பற்றி இன்று வரை முதலாவது இடத்திலுள்ளார்.

சிம்பாவே அணியுடனான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 2:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி 1998ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி அழைத்தற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 55 ஓட்டங்களை கொடுத்து ஸ்ரான்ங்கை (03) வெளியேற்றி ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 45.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி 1998ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து அணித்தலைவர் காம்பிலை (06) ஆட்டமிழப்புச் செய்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2:0 என்றகணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இலங்கை அணியில் முரளிதரனுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**பாலா**

இப்போட்டியிலும் இலங்கை அணி வெற்றிபெற்று ஒருநாள் தொடரையும் 3:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

(பயணிக்கும்)

## சிற்றிலிங் சி.டி.எம்.ஏ. சாவகச்சேரியில் இன்று பெறலாம்

சிறிலங்கா ரெலிக்கொம்மின் சிற்றிலிங் சி.டி.எம்.ஏ. தொலைபேசியை இன்று சாவகச்சேரி நகரப் பகுதியில் சிறிலங்கா ரெலிக்கொம் பரிவர்த்தனை கோபுரம் அமைந்துள்ள வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய முகாமையாளர் என். சிவானந்தன் அறிவித்துள்ளார்.

இன்று மட்டும் நடைபெறும் இச் சேவையில் அடையாள அட்டை போட்டோ பிரதி மற்றும் முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணம் என்பவற்றை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இலங்கை விவகாரங்...

உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். விடுதலைப் புலிகளுடனான போரின் பின்னர் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் இலங்கைக்கு பாகிஸ்தான் கட்டளை எதனையும் இடாது.

இலங்கை அரசு மீதும் அதன் மக்கள் மீதும் இஸ்லாமாபாத் நம்பிக்கை வைத்துள்ளது. அவர்களுக்கு என்ன தேவை என்பது தொடர்பில் அவர்கள் மிக முன்னோக்கிய பார்வையுடனும் நம்பிக்கையுடனும் இருக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியும். இது ஓர் உள்நாட்டுப் பிரச்சினை மட்டுமே.

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் செயற்பட்டுவரும் நாடுகளில் அவர்களைக் கைது செய்வதற்கு அந்தந்த நாடுகள் உதவ வேண்டும் என்று இலங்கை அரசு விடுத்துள்ள கோரிக்கைக்கு எல்லா நாடுகளும் உதவ வேண்டும். ஏனெனில் பயங்கரவாதம் எங்கு இருந்தாலும் பயங்கரவாதம் தான் என்று மசூத்காலித் மேலும் தெரிவித்தார்.

இதேவேளையில் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் ஊக்குவித்து வருகின்றது என்று இந்தியா நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அமெ.வுடன்...

அரசின் மீதான புதுடில்லியின் அரசியல்பிடி தளர்ந்து போயிருப்பதையே காணக்கூடியதாக இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கும் பத்ரகுமார், இழந்துபோன செல்வாக்கை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அனைத்துலக சமூகத்துடன் இணைந்து செயற்படவேண்டிய நிலையில் இந்தியா இருப்பதாகவும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அனைத்துலக கண்காணிப்புக்குழு ஒன்றை அவசரமாக அமைத்தல், அரசியல் தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் அனைத்துலக சமூகத்தின் அபிப்பிராயத்தை திரட்டுதல், நியாயமான ஒரு நேர அட்டவணையில் மீள் குடியேற்றத்தை மேற்கொள்ளுதல் போன்றவற்றில் அனைத்துலக சமூகத்துடன் டில்லி இணைந்து செயற்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலவார ஏடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில், கடனை வழங்குவதற்காக அனைத்துலக நாணய நிதியம் விதித்த நிபந்தனைகளில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்துலக மேற்பார்வையிலான நடைமுறை ஒன்று தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தடன், போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் எனக் கோரியிருப்பதன் மூலமாக சரியான ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் செய்துள்ளது எனவும் சுட்டிக் காட்டியிருக்கின்றார். (ச-5)

## இலங்கையின் உள்நாட்டு நிதி நிர்வாகம்...

அவர் கூறினார். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

அவசர அவசரமாக கடன் தொகையினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, அதன் பிற்பாடு அரசாங்கம் எதிர்நோக்க வேண்டிய பிரச்சினைகள் தொடர்பில் சிந்திக்காமல் செயல்பட்டுள்ளது.

அரசாங்கம் எடுத்த அவசரமான முடிவுகளினால் இலங்கை மத்தியவங்கியின் செயல்பாடுகளில் சர்வதேச நாணய நிதியம் தலையிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் உள்நாட்டு மொத்த உற்பத்திகளுக்கு 2 வீத வரி அதிகரிப்பு மற்றும் அடுத்தாண்டு வரவுசெலவுத்திட்டத்தில் 5 வீதக் குறைப்பு போன்ற பல்வேறு நிபந்தனைகளை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளதுடன், அதன் விளைவுகள் தொடர்பாக அரசாங்கம் இன்றும் கவனம் செலுத்தாமலே உள்ளது.

கடந்த வருடத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் மூடப்பட்ட இலங்கைக்கான கிளைக் காரியாலயத்தை மீண்டும் இலங்கையில் திறந்ததன் மூலம் உள்நாட்டு விவகாரங்களில் வெளிச் சக்திகளின் அநாவசியத் தலையீட்டிற்கு அரசாங்கம் வழிவகுத்துக் கொடுத்துள்ளது என்றார். (ச-5)

## புதுமணத் தம்பதிகள்...

வீதியைச் சேர்ந்த வீரசிங்கம் சுரேஷ்குமார் (வயது 37) அவரது மனைவி சுகதீபா (வயது 25) ஆகிய தம்பதியினரே கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவருவதாவது,

சம்பவத்தில் கொல்லப்பட்ட தம்பதியினர் திருமணமாகி 4 மாதங்களேயாகும். சம்பவம் நடைபெற்ற வீட்டில் இருவரும் தனியாக வாழ்ந்து வந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் நாய் குரைத்த சத்தம் தொடர்ச்சியாக கேட்டதாக அயலவர்கள் பொலிஸ் விசாரணையில் தெரிவித்தனர்.

பிரஸ்தாப தம்பதியினர் வீட்டில்ஒரு அறையில் கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர்.

சம்பவம் பற்றி அயலவர்களுக்குத் தெரியாத நிலையில் காலையில் மகனைப் பார்ப்பதற்காக அவர்களது வீட்டிற்குச் சென்ற தந்தையாரால் இச்சம்பவம் குறித்து தெரியவந்ததையடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு முறையிடப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். இக் கொலைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் அலவாங்கு வீட்டுக் கிணற்றிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த தம்பதியினர் அணிந்திருந்த நகைகள் கொலையாளிகளால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

பிரஸ்தாப குடும்பஸ்தர் விவசாயம் செய்து வருவதாகவும் இவர் அமைதியான சுபாவம் கொண்டவர் எனவும் அயலவர்கள் தெரிவித்தனர். (ச-5,7)

## புலிச் சந்தேக...

கிளிநொச்சியில் கைதுசெய்யப்பட்ட விஜயன் என்பவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பாக்கியராஜா என்ற இந்த விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கியஸ்தர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். பாக்கிராஜாவின் தாயார் கொழும்பு பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக பணியாற்றிய வருவதுடன் அவரது தந்தை திருகோணமலையில் புத்தகசாலை ஒன்றில் பணியாற்றி வருகிறார். பாக்கியராஜா வெள்ளவத்தை பகுதியில் கணனி தொழிநுட்பம் தொடர்பான கல்வியை கற்றுவந்த போதே புலிகள் அமைப்பில் இணைந்துக் கொண்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர். (ச-5)

## நிவாரணக் கிராமங்...

நிலையங்களிலிருந்து மக்கள் படிப்படியாக விடுவிக்கப்படவுள்ள நிலையில் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் கொடிகாமம் இராமாவில் ஆகிய நலன்புரி நிலையங்களில் முதற்கட்டமாக விடுவிக்கப்படவுள்ள மக்களை அமைச்சர் நேற்று நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினார். நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்த அமைச்சரிடம் மக்கள் மகஜர்களின் ஊடாகவும் நேரடியாகவும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அமைச்சருடன் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினார்கள். (ச-5)

## முகாம்களி...

வன்னியில் உள்ள முகாம்களுக்குத் தாம் சென்று வருவதற்கு, தமக்குள்ள உரிமையை நிலை நாட்டும்படி கேட்டு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த போதே உயர்நீதிமன்றம் இந்தக் கருத்தை தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, லக்ஸ்மன் செனவிரட்ண, சிறிலங்கா சுதந்திரக் கட்சி (மக்கள் பிரிவு) தலைவர் மங்கள சமரவீர, முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் முகமட் ஹசன் அலி, ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் சேர்ந்து இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

சட்டமா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அவரது தரைப்படை இணைப்பு அலுவலர் மேஜர் ஜெனரல் டபிள்யூ. பி.பி. பெர்னான்டோ ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வன்னியில் உள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு தாம் செல்வதற்கான அனுமதியை எதிராளிகள் மறுப்பதன் மூலம் தமது அடிப்படை உரிமைகளை அவர்கள் மீறுகின்றனர் என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

விசாரணையின் போது பதிலளித்த அரச தரப்பு பிரதித் தலைமை வழக்கறிஞர், மனுதாரர்களின் கோரிக்கை தொடர்பில் பாதுகாப்பு செயலர் கவனம் செலுத்தி வருகின்றார் என்றும் ஆனால் அதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது என்றும் சுட்டிக் காட்டினார்.

அவரது வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி வரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது. (ச-5)


## யாழ்.குடாநாட்டில் பெற்றோலியப் பொருட்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை விலை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோலியப் பொருட்களின் சில்லறை விலையமைப்பு பின்வருமாறு;

| | |
|---|---|
| பெற்றோல் 90 ஒக்டேன் ஒரு லீட்டர் | -ரூ. 134.00 |
| லங்கா ஓட்டோ டீசல் ஒரு லீட்டர் | -ரூ. 76.50 |
| மண்ணெண்ணெய் ஒரு லீட்டர் | -ரூ. 54.00 |

இந்த விலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.**
**2009.07.29**

(C-2944)



## வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான சந்திப்பு எதிர்வரும் 01.08.2009 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற இருப்பதனால் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் அமைச்சரின் யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரான்லி வீதி அலுவலகத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்**

**யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்**

T.P. :- 077-8449742

(3035)


## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தகுமாரி விக்னராசா

*(விரிவுரையாளர் -ஆங்கிலத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*

"நல்ல போராட்டத்தை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது." *2 தீமோ. 4:7, 8*



திருமதி கீதா ஜெரல்டீன் சாந்தகுமாரி விக்னராசா 28.07.2009 அன்று மாலை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் இ.த.விக்னராசா (மேல் நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், சங்கீதா (U.K), சவீந்திரா (U.K), சஞ்சேந்திரா (சட்ட விரிவுரையாளர்- யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உதயசங்கர் (U.K), அவர்களின் அன்பு மாமியாரும், செல்வன் உதேசனின் (Timy) அருமை அம்மம்மாவும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி J.P. இராசதுரை (இளைப்பாறிய தபால் அதிபர்) தம்பதிகளின் அருமை மகளும், மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி இராமசாமி தம்பையா (இளைப்பாறிய தபால் அதிபரும் சமாதான நீதவானும்) தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற வால்ரர் பாலகிருஷ்ணன் இராசதுரை, தாமரைகுமாரி (U.K), அரசகுமாரி (DENMARK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஸ்ரா, நவரட்ணராஜா (U.K), ஜெயசீலன் (DENMARK), பொன்மலர்- இராஜேஸ்வரன், இராமச்சந்திரன்-கமலாம்பிகை, விக்னராணி-கனகராயர் (U.S.A), மகாராணி-யோகலிங்கம் (CANADA), அழகராசா- கருணேஸ்வரி (CANADA), பவளமலர் ஆகியோரின் மைத்துனியும்,

அஞ்சலினா-தஞ்சரட்னம், அஞ்சலோ, சன்ரா, மீரா, செலினா, நிலாணி-எண்குணன், கலாணி-தனஞ்சயன் ஆகியோரின் பாசமிகு சித்தியும், அனுஷா-முரளி, கவிதா, கிருஸ்ணா ஆகியோரின் அருமை மாமியாரும், அர்ச்சனா, அனந்தன் ஆகியோரின் ஆசை அம்மாவும், யோனத்தன், யோசுவா, சிறிராம், ஜஷ்னி, சர்வித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 30.07.2009, வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை தென் இந்திய திருச்சபையில் ஆரம்பமாகி வட்டுக்கோட்டை குடும்ப சேமக் காலையில் மாலை 5.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இல. 01, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 2361, 021 222 9709

**இ.த.விக்னராசா** *(கணவர்)*
(மேல் நீதிமன்ற நீதிபதி,
யாழ்ப்பாணம்)

## OBITUARY

Geetha Jeradine Shanthakumari Vigna Raja at Rest with Jesus. Beloved wife of R.T.Vigna Raja (High Court Judge,Jaffna) ,loving mother of Sangeetha (U.K) Shavindra (U.K) and Sanjendra (Lecturer, Department of Law,University of Jaffna), mother -in-law of Shanmugalingam Uthayashanger (U.K) ,loving grandmother of Utheshan (Timy), Sister of Late Walter Balakrishnan Rajadurai, Thamaraikumari (U.K),and Arasakumari (DENMARK),loving daughter of Late Mr.&Mrs.J.P.Rajadurai,beloved daughter-in-law of Late Mr.&Mrs. R.Thambiya,of Moolai Chulipuram. Burial on 30th July 2009 (Thursday) at 5.00 p.m. at the family burial ground, Vaddukkoddai, after the Funeral Service at THE CATHEDRAL,Vaddukkoddai,from 3.30p.m.

*High Court Judge Bungalow,*
*No.01,Chetty Street,Nallur,Jaffna.*
*Tel.Nos: 021-222 2361 & 021-222 9709*

(C-2943)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.